பக்கங்கள்: 24
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 05 வியாழக்கிழமை 18.03.2021 கதிர் 367

## நாயாறு விபத்தில் இளைஞர் சாவு!

முல்லைத்தீவு – நாயாற்றுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கொக்குத்தொடுவாயில் இருந்து அளம்பில் நோக்கி இருவருடன் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து நாயாற்று பாலத்தில் மோதி விபத்திற்கு இலக்காகியுள்ளதாக தெரியவருகிறது.

2

## கருத்துருவாக்கமே நம் பணி

உங்கள் காலைக்கதிரின் 'மாலை இதழ்' இன்று தனது இரண்டாவது ஆண்டில் கால் பதித்துள்ளது.

அதன் வருகைக் காலமும் கொரோனாப் பேரரக்கன் இலங்கையில் காலூன்றிய வேளையும் ஏறத்தாழ சமநேரம்தான்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் கூட அன்றுதான் இடம்பெற்றது. தனது முதல் மாலைப் பதிப்பிலேயே வேட்புமனுத்தாக்கல் பற்றிய தகவல்களை வெளியிட்ட மாலைப்பதிப்பு, அன்றைய இதழில் அதிர்ச்சி தரும் தகவல் ஒன்றையும் தனது முற்பக்கத் தலைப்பில் வெளியிட்டது.

'வேட்புமனுத்தாக்கல் முடிந்ததும், இரு வாரங்களுக்கு நாடு முடக்கப்படும்! இரும்புக் கைக்கொண்டு கொரோனாவை அடக்கத் தயாராகிறது கோட்டா அரசு' என்று பரபரப்புச் செய்தி தந்தது நம் மாலை இதழ்.

கொரோனா பரவும் அச்சம் பற்றி ஆரவாரப்பட்டாலும் நாட்டைமுடக்குவது குறித்தானபேச்சுகள்வெளிப்படாத காலத்தில், இதுதான் நடக்கப் போகின்றது என்பதை முற்கூட்டியே - முதல் இதழிலேயே - துணிச்சலுடன் - நம் மாலைப் பதிப்பு தந்தபோது அதனைப் பலர் அந்தச் சமயத்தில் நம்ப மறுத்தனர். ஊடகத்துறையினர் அத்தலைப்புச் செய்தியை ஏளனத்தோடு நோக்கினர். ஆனால் அடுத்த சில தினங்களில் அறிவிக்கப்பட்ட நாடு தழுவிய முடக்கம் இரண்டு வாரங்களைத் தாண்டி, இரண்டு மாதங்களையும் கடந்து, நீடித்தமை வரலாறு.

கொரோனாத் தொற்று அச்சம், நாடு தழுவிய முடக்கம், ஊரடங்கு, நடமாட்டத்துக்கான தடை, செய்தி சேகரிப்பில் சிக்கல் என்று இன்னோரன்ன நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கடந்த ஆண்டு இதே நாளிலிருந்து ஒரு நாள் கூடத் தவறாமல் உங்களைத் தேடி வருகின்றது நமது மாலை இதழ்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களைத் தேடி வரும் 'காலைக்கதிர்', கடந்த ஆண்டில் 'பசுமை ஊடக இல்ல வெளியீடாக' தன்னை மாற்றிக் கொண்ட காலத்தில் இருந்து, இயற்கையைப் பேணி, பசுமைச் செழிப்பை நிலைநிறுத்துவதில் அதிக ஈடுபாடு காட்டி வருகின்றது. அதன் ஓர் அங்கமாக எமது சகோதர ஏடாக 'செம்மண்' வார இதழை வாசகர்களாகிய நீங்கள் தவறாது பெற்று வருகின்றீர்கள்.

அச்சுப் பதிப்புக்காகக் காகிதங்களை எண்ணுக் கணக்கின்றி பயன்படுத்துவது காடழிப்புக்கு - மர அழிப்புக்கு - இயற்கை அழிவுக்கு - துணை போகும் என்ற உண்மை கருதி, அச்சுப் பதிப்பையும் தாண்டி மின் இதழாக காலைக்கதிர் இதழ்களை உங்களை எட்டச் செய்வதில் நாம் அதிக ஈடுபாடும் கரிசனையும் காட்டி வருகின்றோம்.

தமிழ்ப் பத்திரிகை உலகில், இவ்வாறு மின்னிதழாக வாசகர்களை எட்டுவதில் - உலகம் முழுவதும் இருக்கும் தமிழ் வாசகர்களை அவர்களின் இலத்திரனியல் கருவிகள் மூலம் நேரத்துடன் படுக்கையிலேயே சந்திக்கின்ற முறைமையை - அறிமுகப்படுத்தியதில் நாங்களே வழிகாட்டிகள் என்று கூறுவது தற்பெருமைக் கூற்றாயினும், அதுதான் உண்மை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறோம்.

கட்டணம் ஏதுமின்றி, வாசகர்களை அவர்கள் விழிக்கும்போதே சந்திக்கத் தயாராகக் காத்திருக்கும் விதத்தில் மின் இதழ்களை இலவசமாகப் பகிர்கின்ற மையை ஏளனத்துடன் பார்த்த பல முன்னணி ஊடக நிறுவனங்கள் கூட எமது அந்த வழிகாட்டலை இப்போது பேச்சு மூச்சின்றிப் பின்பற்றும் நிலைமையை நாம் இப்போது காண்கின்றோம்.

வெற்றிகரமாக, இலாப நோக்கங்களை எட்டுவதைத்தான் பல ஊடக நிறுவனங்கள் தமது முதல் இலக்காகக் கொண்டிருந்தபோதும், பசுமை ஊடக மையம் அதனைத் தன் பிரதான நோக்காகக் கொள்ளவில்லை. மாறாக, மனிதநேயக் கருத்துருவாக்கத்தைத் தனது பாதையாக வகுத்துக் கொண்டுள்ள நமது ஊடக இல்லம், சீரிய, நேரிய, உயரிய சமூகம் ஒன்றைக் கட்டமைப்பதற்கான கருத்துருவாக்கமே தனது தலையாக நோக்கமாகக் கொண்டு இயங்குகின்றது.

அதற்கு வாசகர்களாகிய நீங்கள் வழங்கும் அளப்பரிய ஒத்துழைப்பை தொடர்ந்தும் அன்புரிமையுடன் வேண்டி நிற்கிறோம்.

- பசுமை ஊடக இல்லம்

# யுத்தக் குற்றத்திலிருந்து தப்ப உள்ளக விசாரணை அவசியம்

## சரத் பொன்சேகாவுக்குக் காலம் பிந்திய ஞானம்



கொழும்பு,மார்ச்18

மிருசுவில் படுகொலையுடன் தொடர்புடைய முன்னாள் இராணுவ சிப்பாய் சுனில் ரத்னாயக்கவின் செயல்கூட போர்க்குற்றம்தான். எனவே, போர்க் குற்றச் சாட்டுகளில் இருந்து விடுபட வேண்டுமெனில் சுயாதீன உள்ளக விசாரணையை முன்னெடுக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், இறுதிக்கட்டப்போரை வழி நடத்திய இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வலியுறுத்தினார்.

2

## வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகளுக்கு தமிழக கட்சிகளுடன் இரகசியத் தொடர்பு

### தமிழீழப் பிரசாரம் அரசுக்குப் பிரச்சினை இல்லை என்கிறார் சுசில்



கொழும்பு, மார்ச்.18

இலங்கையின் வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகள் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளுடன் இரகசியத் தொடர்பைப் பேணி வருகின்றனர். தமிழக சட்டமன்றத் தேர்தல் களத்தில் தமிழீழம் தொடர்பாக தெரிவிக்கப்படும் கருத்துக்களை அதிகளவு கவனமெடுக்கும்தேவை இலங்கை அரசுக்கு இல்லை.

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப்

2

## ஐ.நாவிடம் இலங்கையை காட்டிக்கொடுக்காதீர்கள்!

### தமிழர்களிடம் அரசு வேண்டுகோள்



அரசாங்கம் வழங்கியுள்ள சுதந்திரத்தைப் பயன்படுத்தி வடக்கு, கிழக்கில் அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி ஐ.நாவிடம் இலங்கையைக் காட்டிக்கொடுக்கும் கைங்கரியத்தையே தமிழ் மக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் செய்து வருகின்றனர். இவ்வாறான நடவடிக்கையை நிறுத்து

2

## ஜெனிவாவில் இலங்கையை ஆதரிப்பதில் இந்தியா உறுதி

### ஜயநாத் கொலம்பகே நம்பிக்கை


ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்தியா, இலங்கையை ஆதரிக்கும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

பிராந்தியத்தின் இறையாண்மையை பாதுகாக்கும் வகையில் இந்தியா இலங்கைக்கான

2



## சிறிதரனிடம் இன்றும் வாக்குமூலம் பதிவு



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான பேரணியில் கலந்து கொண்டமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனிடம் மன்னார் பொலி

2

## பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உடன் நீதியை வழங்குங்கள்!

### சர்வதேசத்திடம் சம்பந்தன் கோரிக்கை



இலங்கை அரசாலும் அதன் படைகளாலும் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரி தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் எழுப்பும் அவலக்குரலுக்கு சர்வதேச சமூகம் செவிசாய்க்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

2

## ரயில் சேவை வழமைக்கு

நாட்டில் ரயில் சாரதிகள் உள்ளிட்ட ரயில்வே தொழிற்சங்கங்கள் பல நேற்று நள்ளிரவு முதல் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. எனினும் சமரச பேச்சுக்களைத் தொடர்ந்து அவை வழமைக்குத் திரும்பியுள்ளன என ரயில்வே சங்கங்கள் தெரிவித்தன.

ரயில் சேவையில் ஈடுபடும்போது

2

## பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசத்திடம் நீதி கோரி யாழ்ப்பாணத்தில் மாபெரும் மக்கள் பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் தமிழ் மக்கள் முன்னெடுக்கும் உணர்வெழுச்சிமிக்க அறவழிப் போராட்டங்களை நாம் மதிக்கின்றோம். சர்வதேச சமூகமும் இந்தப் போராட்டங்கள் தொடர்பில் தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் அதிக கரிசனை செலுத்த வேண்டும்.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட பிரேரணை வரையையும் நாம் வரவேற்கின்றோம்.

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கொண்டுள்ள கரிசனைகளையும் நாம் வரவேற்கின்றோம்.

பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை நழுவ முடியாத வகையில் ஐ.நா.உள்ளிட்ட சர்வதேச சமூகம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் வரவேற்கின்றோம்.

எனவே, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேசம் தாமதமின்றி நீதியை வழங்கியே தீரவேண்டும் – என்றார்.

## ஐ.நாவிடம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு அவர்களிடம் மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சர்வதேசத்திடம் நீதி கோரி யாழ்ப்பாணத்தில் மாபெரும் மக்கள் பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் நிறைவுக்கு வந்த பின்னர் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் நடைபெறும் காலங்களில் வடக்கு, கிழக்கில் தமிழர்கள் அரசுக்கு எதிராகவும் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் பெரும் எடுப்பில் போராட்டங்களை நடத்துவது வழமை. ஆனால், இம்முறை இந்தப் போராட்டங்கள் உச்சமடைந்துள்ளன.

அரசையும் பெரும்பான்மையினத்தவர்களாக இருக்கும் சிங்களவர்களையும் சீண்டிப்பார்க்கும் வகையிலேயே இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் பின்னணியில் புலம்பெயர் அமைப்புகளின் கோடிக்கணக்கான நிதிதான் உள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு வழங்கியுள்ள சுதந்திரத்தை வடக்கு, கிழக்கு தமிழ்ச் சமூகம் தவறான வழியில் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் – என்றார்.

## ரயில் சேவை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுகின்ற தவறுகளின் நட்டத்தை ரயில் ஊழியர்களிடமிருந்து அறவிடுகின்றமை,

அசாதாரணமாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது எனவும் தொழிற்சங்கங்கள் குறிப்பிட்டன.

ரயில்வே அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுகள் வெற்றியளிக்காத நிலையிலேயே, தாம் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஆரம்பித்ததாகவும் பின்னர் அவர்கள் சமரசத்துக்கு வந்துள்ளனர் என்றும் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

## நாயாறு விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விபத்தில் அளம்பில் – தங்கபுரத்தினைச் சேர்ந்த 26 வயதுடைய இராசன் மோகன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். அதேபகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய கோபால் புஷ்பராசா என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வடக்கு, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் பா.ஜ.க. கிளையொன்று திறக்கப்படவுள்ளது எனவும், ஈழ தேசம் உருவாக்கப்படவுள்ளது எனவும் தமிழக தேர்தல் களத்தில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பில் அரசின் கருத்து என்னவென்று ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த –

தமிழகதேர்தல்களத்தில் இலங்கைத் தமிழர்களின் விவகாரம் பிரதான பிரசார அம்சமாக இருந்தாலும், தேர்தலைத் தொடர்ந்து அவர்கள் அதனை மறந்து விடுகின்றனர்.

பாரிய போராட்டங்களைத் தொடர்ந்து முப்பது வருட போர் முடிவடைந்துள்ளது. நாட்டில் இனிமேல் பிரிவினைவாத செயற்பாடுகள் தோற்றம் பெற மாட்டாது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகள் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளுடன் இரகசியத் தொடர்பைப் பேணி வருகின்றனர். தமிழ் நாட்டு அரசியல் கட்சியினர் இரகசியமாகவும், சட்ட ரீதியாகவும் இலங்கைக்கு வந்து செல்கின்றனர் – என்றார்.

## சிறிதரனிடம் இன்றும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாரால் இன்று வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்று காலை கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் வைத்து இந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

## யுத்தக் குற்றத்திலிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பாகிய அரசியல் விவாத நிகழ்வில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

சர்வதேச விசாரணையை எமது அரசு ஏற்கவில்லை. குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளனவா என்பதை கண்டறிவதற்கு உள்ளக விசாரணை முன்னெடுக்கப்படும் என்ற உறுதிமொழியே வழங்கப்பட்டிருந்தது. இதன்படி தேசிய பொறிமுறை உருவாக்கப்படவேண்டும்.

போரை முன்னெடுக்கையில் சர்வதேச சட்டத்திட்டங்களை நாம் முழுமையாக பின்பற்றினோம். போர்க்களத்தில் குற்றங்கள் இழைக்கப்படவில்லை. சிறு சம்பவங்கள் இடம்பெற்றிருந்தால் கூட அவற்றிற்கு எதிராக சட்டத்தை செயற்படுத்தினேன். இறுதிப் போரின்போது மக்களை பாதுகாக்கும் நோக்கில் நாம் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை. மெசின் கன் பயன்படுத்தவில்லை. இதனால் இறுதி நான்கு மாதங்களில் அதிகளவில் இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

ஆனால் போர்க்களத்துக்கு வெளியில் சுனில் ரத்னாயக்க என்பவர் செய்த செயல் (மிருசுவில் படுகொலை) தவறு. அப்போது நான் யாழ். கட்டளைத் தளபதியாக இருந்தேன். சீருடை அணிந்தவர் என்பதற்காக அவ்வாறு செய்ய முடியாது. அது கூட போர்க்குற்றம்தான்.

இறுதிப்போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டை ஏற்கமுடியாது. அதனை நிராகரிக்கின்றோம். சர்வதேசத்தில் இருந்து குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. அவர்களுக்கு சிலரால் வழங்கப்படும் தகவல்களை நம்புகின்றனர். எனவே, என்ன குற்றச்சாட்டு, எத்தனை பேர் கொல்லப்பட்டனர், சம்பவம் எங்கு நடைபெற்றது என்பன தொடர்பான தகவல்களை முன்வைக்குமாறு அரசு கோர வேண்டும். அவ்வாறு முன்வைக்கப்பட்டால் உள்ளக விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும். நீதிமன்றம் உருவாக்கப்படவேண்டும். கலப்பு நீதிமன்றம் தேவையில்லை. குற்றச்சாட்டுகளை வெறுமனே முன்வைக்க முடியாது. ஆதாரங்கள் தேவை. – என்றார்.

## ஜெனிவாவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளது என்று ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார் என்று இலங்கையின் தேசிய அபிவிருத்தி தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வல்லரசாக இருக்கும் இந்தியாவை, ஜயநாத் கொலம்பகே பெரிதும் பாராட்டியுள்ளார் எனவும் தேசிய அபிவிருத்தி தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபை விடயத்தில் இந்தியாவின் தீர்மானம் தொடர்பாக இதுவரையில் அந்நாட்டு அரசால் உத்தியோகபூர்வமாக எந்த அறிவித்தலும் விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி!

டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று புதன்கிழமை மேலும் சரிவை சந்தித்துள்ளது.

அமெரிக்க டொலரின் விற்பனை விலை 201.75 ரூபாவை எட்டியதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்க டொலரிற்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 200 ரூபாவாக அதிகரித்தது.

இதற்கு முன்னர் கடந்த 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவிலேயே அமெரிக்க டொலரிற்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 200 ஐ கடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்






## நிர்வாகியின் பதிவிலிருந்து...

**பசுமை ஊடக இல்லத்தின் நிர்வாக இயக்குநர் சி.அனுராஜ் கடந்த ஆண்டு இதேநாளில் தமது முகப்புத்தகத்தில் பகிர்ந்த கருத்துக்கள் இவை:-**

மரங்கள் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதில்லை!
கரைகள் ஓய்வை விரும்பினாலும் அலைகள் விடுவதில்லை!!
மனிதன் ஓய்வை விரும்பினாலும் வாழ்க்கை விடுவதில்லை!!!

நீண்ட நான்கரை வருட இடைவெளியின் பின்னர் மீண்டும் ஊடகத்துறைக்குள் என்னை உள்நுழைத்துக்கொள்கிறேன். ஓர் ஊடகவியலாளனாகவும் நிர்வாகியாகவும் மட்டுமல்லாமல் இயற்கையையும் எமது மக்களையும் நேசிப்பவனாகவும் இந்தப் பணியை செவ்வனே ஆற்றுவேன் என நம்புகிறேன்.

எனது ஊடக ஆசானும் ஊடகத்துறை ஜாம்பவானுமான திரு. என்.வித்தியாதரனால் 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'காலைக்கதிர்' பத்திரிகையை இன்றுமுதல் முழுமையாக பொறுப்பேற்கிறேன்.

தினமும் அதிகாலையே மென்பதிப்பாக உங்களின் கைபேசிகளுக்கு வந்து சேரும் 'காலைக்கதிர்' இன்றுமுதல் தினமும் மாலை அச்சிலும் வெளிவர இருக்கிறது.

திரு. என்.வித்தியாதரன் தலைமையிலான அனுபவம் மிக்க ஆசிரியர் குழாம், ஊடக நெறிநின்று நடுவுநிலையாக – அரசியல் பக்கச்சார்பற்றதாக 'காலைக்கதிர்' பத்திரிகையைக் கொண்டுசெல்ல உறுதிபூண்டுள்ளோம்.

தமிழர் தேசியம் – பண்பாடு/ கலாசாரம் – இயற்கையுடனான வாழ்வியல் ஆகியவற்றை முன்னிறுத்தி ஈழத்து மற்றும் புலம்பெயர் தமிழர்களின் மனங்களை வெல்வோம் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் இந்த புதிய பயணம் ஆரம்பமாகின்றது.

**சி.அனுராஜ்**
**(நிர்வாக இயக்குநர்)**

## ஒரு 'வித்தி'யாசம்

ஆரவாரம் இல்லாமல் -

பெரும் எடுப்புகள், கொண்டாட்டங்கள் இல்லாமல் -

சிறப்பிதழ் என்ற பெயரில் தன்னை வாழ்த்துவதற்கு விளம்பரதாரரைத் தனக்குக் கட்டணம் செலுத்தி விளம்பரங்களைப் பிரசுரிக்குமாறு வற்புறுத்தாமல் -

தனது ஆண்டு நிறைவை, வாசகர்களுடன் செய்திகள், தகவல்களைப் பகிர்வதன் மூலம் அமைதியாக அனுஷ்டிப்பதே 'காலைக்கதிர்' நாளிதழின் வழமையான பாணி.

அதில் இம்முறை ஒரு சிறிய மாற்றம் வித்தியாசம்.

பத்திரிகையின் வருகைக்கும், இருப்புக்கும், செழிப்புக்கும் வாசகர்கள் போல விளம்பரதாரர்களும் மிக மிக முக்கியமானவர்கள்.

ஆண்டு நிறைவின் மகிழ்வில் விளம்பரப் பிரிவு மற்றும் விளம்பரதாரரின் பங்களிப்பும் இணைவும் மிக முக்கியம் என்பதால் இம்முறை எமது ஆண்டு நிறைவு மலரில் விளம்பரங்களும் தாராளமாக பங்களிக்கின்றன. ஆனால், அவை கட்டணம் செலுத்தி எம்மை வாழ்த்தும் விளம்பரங்கள் அல்ல. மாறாக, இதுவரை காலமும் எம்முடன் பயணித்த விளம்பரதாரர்கள் நமக்குக் கூறும் வாழ்த்துக்களை, ஆசிகளாகப் பெற்று நாமாக அவற்றைப் பிரசுரித்து அவர்களுடன் சேர்ந்து மகிழ்கிறோம்.

பத்திரிகையின் செழிப்புக்கு இருப்புக்கும் அளப்பரிய பங்காற்றும் விளம்பரதாரர்களுக்கும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் நமது விளம்பரப் பிரிவுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் விசேட நன்றி பகிர்கின்றோம்.

- பசுமை ஊடக இல்லம் -



# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

## பொறுப்புணர்ந்து உண்மைத்தன்மையுடன் பத்திரிகாதர்மம் பேணும் காலைக்கதிர்!



தனது மாலைப் பதிப்பின் முதலாம் ஆண்டுபூர்த்தியைக் கொண்டாடும் காலைக்கதிர் பத்திரிகையினருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய இலத்திரனியல் உலகிலே இந்தப் பத்திரிகை தனது பொறுப்புணர்ந்து தரமான முறையில் உண்மைத் தன்மையுடன் செய்திகளை வழங்கி வருகின்றது.

அதிலும் விசேடமாக மாலைப் பதிப்பென்பது அவர்களது ஒரு புதுமையான மற்றும் காலத்தின் தேவைக்கேற்ற ஒரு முயற்சியாகும். ஒரு நாளின் நிகழ்வுகளை மறு நாள் வரை காத்திருந்து அறிந்து கொள்ள வேண்டியிருந்த சூழ்நிலையில் அன்றைய நாளிலேயே அவற்றை அறிந்துகொள்ளும்படி மாலைப்பதிப்பை அறிமுகப்படுத்தியமை வரவேற்கத்தக்கதும் பாராட்டுதற்குரியதுமாகும்.

மேலும் இன்றைய அவசர உலகிலே பத்திரிகையை போய் சென்று வாங்கும் சிரமத்தினையும் குறைத்து இலத்திரனியல் வடிவிலே இருக்கின்ற இடத்திலேயே தகவல்களை அறியத்தருகின்றது காலைக்கதிர். அத்தோடு யாழினை மையப்படுத்தி இயங்கியபொழுதும் நாடு முழுவதும் மற்றும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கும் செய்தியை அறியத்தருவதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

இவர்களோடு கூட மேலும் பல பத்திரிகைகள் மாலைப்பதிப்பை தொடக்கியபோதும், நீடித்து சேவையைத் தொடர முடியவில்லை என்பது மக்களின் ஆதரவு எப்போதும் தரமானதும், உண்மையானதும், மற்றும் சமூக பொறுப்போடும் கூட செய்திகளை தரு பவர்களுக்கே என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

தொடர்ந்தும் உங்கள் பணி செம்மையாகவும் செழிப்பாகவும் தொடர எனது வாழ்த்துக்களை, பத்திரிகையின் நிர்வாகம், ஆசிரியர், நிருபர்கள் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ம.ஆ.சுமந்திரன்**
**(ஜனாதிபதி சட்டத்தரணி,**
**நாடாளுமன்ற உறுப்பினர்**
**யாழ் மாவட்டம்)**

## ஈராண்டில் அடி எடுத்து வைக்கும் எழில்நலத்தை வாழ்த்துகின்றேன்!

**ஆதவன் உதித்தவுடன் ஆளுமையை வெளிக்கொணர்ந்து**
**நாடெல்லாம் நற்செய்தி தந்துநிற்கும் காலைக்கதிர்**
**மாலையிலும் மலர்ந்துவிட வாண்மையுடன் எழுச்சியுற்று**
**ஈராண்டில் அடிவைக்கும் எழில்நலத்தை வாழ்த்துகிறேன்!**

**மின்னிதழாய் வெளியாகி மேதினியில் தமிழரில்லம்**
**சென்றடையும் வல்லமையை காலைக்கதிர் காட்டியது**
**மின்னலென ஓரம்சம் வெளிச்சிமிட்டுப் பலவற்றை**
**தெள்ளிதிற் புரியவைக்கும் தெரிசனத்தைக் காட்டியது!**

**ஈழமண்ணில் மாலையிலே இறும்பூது எய்துதற்கு**
**காலைக்கதிர் தடம்பதித்து ஈராண்டு ஆகிறது**
**ஆளுகின்றார் அவலங்களை ஆணவத்தைத் தோலுரிக்கும்**
**காலைக்கதிர் வளர்கவென்று களிப்புடனே வாழ்த்துகிறேன்!**

**சுவையான தமிழ்நடையில் சுடச்சுடவே செய்திதரும்**
**பயனான காலைக்கதிர் பக்குவாய் ஈராண்டில்**
**தலைநிமிர்ந்து தமிழ்மண்ணில் தானெழுந்து நிற்கிறது**
**அமுதான காலைக்கதிர் ஆண்டுபல கண்டிடுக !**

**வித்தியெனும் வித்தகரை வியந்துமே வாழ்த்துகிறேன்**
**சொத்தெனவே காலைக்கதிர் கொண்டுமே வாழுகிறார்**
**காலைக்கதிர் பத்திரிகை கண்ணியத்தின் வெளிச்சமாய்**
**பல்லாண்டு வளர்கவென பைந்தமிழால் வாழ்த்துகிறேன்!**



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**(மேனாள் தமிழ் மொழிக்கல்வி**
**இயக்குநர், - மெல்பேண்,ஆஸ்திரேலியா)**









# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

## காலைக்கதிர் ஒரு வரப்பிரசாதம்



காலைக்கதிர் மாலைப் பதிப்பு வெளியிடத் தொடங்கி ஓராண்டு பூர்த்தி அடைகின்றது. பசுமை ஊடக இல்லம் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனமே இதனைச் செய்து வந்துள்ளது.

காலையிலும் மாலையிலும் காலைக்கதிர் மின்னிதழ் வடிவில் வந்து கொண்டிருக்கின்றது. நன்மை பயக்கும் பல்வேறு விடயங்களைத் தாங்கி இவ் விரட்டைப் பத்திரிகைகள் கடந்த ஓராண்டு காலமாக ஒருமித்து வெளிவந்துள் ளன. இரண்டு பதிப்புக்களுக்குமே ஆசிரியர் தலையங்கங்கள் உருவாக்கி வெளியிட்டு வரும் ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

அதிகாலையில் நித்திரை விட்டு எழும் எனக்கு காலைப் பதிப்பு ஒரு வரப்பிரசாதம். தினமும் வாசிப்பேன். மாலையில் நேரமிருந்தால் வாசிப் பேன். பல விடயங்கள் காலையிலும் மாலை யிலும் மறு பதிப்பு பெற்று வருகின்றன. எனி னும் மாலைப் பதிப்பு சில நாள்களில் சுடச் சுட சில புதிய செய்திகளையும் கொண்டு வருகின்றது. மாலைப்பதிப்பின் தொடர்ச்சி வாசகர்களுக்கு நன்மை பயக்கும் என்றே நான் கருதுகின் றேன். சிரமம் பாராமல் மாலைப் பதிப்பைத் தொடர்ந்து வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன். மாலைப் பதிப்பு தொடர்ந்து வர இறைவன் அனுக்கிரகத்தையும் வேண்டி நிற்கின்றேன்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
(நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ் மாவட்டம்)


















# இரண்டாம் ஆண்டில் ‘காலைக்கதிர்’ மாலை இதழ்

## கொள்கை பிறழாமல் பயணம் தொடர்க!



காலைக்கதிரின் மாலைப்பதிப்பு வெளிவருகின்றமை உண்மையில் மகிழ்ச்சியான விடயம். தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்தில் மாலைப் பதிப்பு வெளிவந்தவுடன் நான் எண்ணினேன் - இது மாலைப் பதிப்பு அல்ல, தேர்தல் காலப் பதிப்பு என்று. அந்தநேரத்தில் காலைக் கதிரை அடியொற்றி வேறு மாலைப் பதிப்புகளும் வெளிவந்தன. ஆனால், அவை நான் சிந்தித்தபடியே தேர்தல் காலப் பதிப்பாக வெளி வந்து தேர்தல் முடிந்ததும் மறைந்துவிட்டன.

இலத்திரனியல் ஊடகத்தில் மூழ்கியிருக்கின்ற - அச்சு ஊடகம் மறைக்கப்பட்டு - மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற - இந்தச் சமூகத்தில், காலைக்கதிர் அச்சு, இலத்திரனியலாகவும், மாலைப் பதிப்பு இலத்திரனியலாகவும் வெளிவருகின்றன. நான், ஆரம்பத்தில் எண்ணினேன் - பல இணையத் தளங்கள் எமக்கு செய்திகளை வழங்குகின்றன, அவற்றினூடாக நாம் அறிந்து கொள்வோம், இவர்கள் என்ன புதிதாகவா தரப்போகின்றார்கள் என்று. ஆனால், ஒவ்வொருநாளும் மாலை தேநீருடனும், காலை அர்த்தசாமத்திலும் பத்திரிகையைப் பார்க்காவிட்டால் அன்றைய பொழுது விடிந்த பொழுதாக அமையமாட்டாது என்றாகிவிட்டது.

பக்கச்சார்பில்லாமல், நடுநிலைத் தன்மையுடன், உண்மையை உறைக்க - உரக்க - சொல்கின்ற வகையில் காலைக்கதிர் செய்திகளைத் தரும். காலை, மாலை என இரு ஆசிரியர் தலைப்புகளை அது வழங்குவது நாட்டின் சமகால விடயங்களை ஆசிரியர் வெளிப்படுத்துகின்ற விதம் வேறு எந்த ஊடகத்துக்கும் இல்லாத தனிச்சிறப்பே.

அத்துடன், நான் அர்த்த சாமத்தில் பத்திரிகை இணையம் ஊடாக வந்தவுடன் முதலில் வாசிப்பது ‘இனி இது இரகசியமல்ல…’ பகுதி. உண்மையில் அதை முதலில் பார்ப்பதற்கு காரணம் பயம். என்னைப் பற்றி ஏதாவது வந்துவிடுமோ என்ற எண்ணத்தில் அதை நான் வாசித்துக்கொள்வதுண்டு.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் உண்மை, நேர்மை, பக்கஞ்சாராமை, நடுநிலைமை போன்ற சதுர்குணங்களைத் தாங்கி, வியாபார நோக்கமின்றி அனைவருக்கும் இலத்திரனியல் ஊடாக காலை, மாலை என செய்திகளை உடனுக்குடன் சுடச்சுட அறிவிப்பதால் ஏனைய ஊடகங்களை விட அதிகளவான வாசகர் வட்டத்தைக் காலைக்கதிர் கொண்டிருப்பது அதற்குரிய தனிச் சிறப்பே. மேன்மேலும் அது தனது கொள்கைவழிநின்று சேவையாற்ற வாழ்த்துக்கள். இந்த ஊடகத்தை கிறீன் மீடியா நிறுவனம் பொறுப்பேற்று மாலைப் பதிப்பும் இணைந்து வெளிவந்து இன்றுடன் ஒரு வருட பூர்த்தி. அதன் ஆசிரியர், ஆசிரிய பீடத்தினர், நிர்வாகத்தினர், செய்தியாளர்கள் மற்றும் ஊடகத்தினருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**சிவஞானம் சிறிதரன்,**
**நாடாளுமன்ற உறுப்பினர்**
**(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)**
**யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்.**

## மாலையிலும் அமுதாகும் புதிரே வாழி!

**காலையும் மாலையும்**
**களைகட்டிய செய்திகளைக்**
**கண கணப்பாய்த் தருவது**
**காலைக்கதிர் ஒன்றே**

**தமிழ் பேசும் மக்களின்**
**தனித்துவமான கதிர்**
**அமிழ்தான மாலையிலே**
**அமுதாகும் புதிர்**

**உண்மையும் நேர்மையும்**
**உயர் பக்கம் சாரமையும்**
**கண்ணென மதிக்கும்**
**கதிரே வாழி என்றும்!**

**கே.எஸ்.சிவஞானராஜா**






# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

## தமிழர்களின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் காலைக்கதிர்



தினமும் காலையில் கதிர்பரப்பி, தமிழர்களின் தனித்துவத்தை வெளிப்படுத்தி வந்த காலைக்கதிர் பத்திரிகை, பசுமை ஊடக நிறுவனத்தின் முகாமையில் புதிய பரிமாணம் பெற்று, மாலைப்பதிப்பை வெளியிடத் தொடங்கி ஓராண்டு பூர்த்தி கண்டிருக்கும் இந்த வேளையில் பசுமை ஊடக நிறுவனத்தையும், அதன் ஆசிரியரையும் வாழ்த்துவதில் மிகுந்த மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த வருடம் மார்ச் மாதம் முதல், உலகையே முடக்கும் அளவுக்கு கொரோனா ஊழித் தாண்டவம் ஆரம்பித்த நேரத்தில் மாலைப் பதிப்பு வெளிவரத் தொடங்கியிருந்தது. மாலைப்பதிப்பு வெளிவந்த சில நாள்களிலேயே அச்சு ஊடகங்கள் முடங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்த நேரத்தில் காலைக்கதிர் தினசரி தனது இரண்டு பதிப்புகளை மின்னிதழ் வடிவில் வெளியிட்டு வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்தமை பாராட்டுக்குரியது. ஒரு பத்திரிகையை வெளியிடுவதற்கே சவால்கள் நிறைந்திருந்த காலப்பகுதியில், காலையிலும், மாலையிலும் இரண்டு பதிப்புகளை வெளியிட்டு – அவை இரண்டுக்கும் ஆசிரிய தலையங்கங்களை வரைவதில் இருந்து வெளிவருகின்ற விடயங்கள் அனைத்திலும் சிரத்தை கொண்டு செயலாற்றிய ஆசிரியரது பணி மெச்சத்தக்கது. அவரோடு சேர்ந்து செய்தி, கட்டுரைகள், சர்வதேச விவகாரங்கள், பல் சுவை அம்சங்கள் எனத் தேவையான சகல விடயங்களையும் தாங்கி பத்திரிகை வெளிவருவதற்காகப் பாடுபட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

மிகவும் ஆச்சரியமான விடயம் என்னவென்றால், தினமும் காலையில் சூரியோதயத்துக்கு முன்னரே – அதிகாலை மூன்று மணிக்கே காலைக்கதிர் மின்னிதழிலேயே விழிக்கிறோம். அதே போல, மாலையிலும் அதன் மாலைப் பதிப்பைக் காணாமல் உறங்கப் போவதில்லை. அந்தளவுக்கு காலைக்கதிர் வாசகர்களோடு ஒன்றித்திருக்கிறது. இன்று போல, என்றும், என்றென்றும் காலைக்கதிர் தன் கதிர் பரப்பி ஒளி வீச எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா.**
**துணைவேந்தர்,**
**யாழ். பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்**

## தமிழரின் சொத்து காலைக்கதிர்



காலைக்கதிர் பத்திரிகையின் மாலைப்பதிப்பு வெளிவரத் தொடங்கி ஓராண்டு நிறைவு பெற்றிருக்கிறது. கொரோனாப் பெருந் தொற்று அச்சம், உலக முடக்கல், ஊரடங்கு, உள்ளூரிலும் வெளியூரிலும் என்றுமில்லாத பொருளாதார நெருக்கடிகள் என குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய இடர் மிகுந்த இந்த ஓராண்டு காலப் பகுதியினுள் பத்திரிகையை வெற்றிகரமாகக் கொண்டு நடாத்துவது என்பது சவாலான ஒரு விடயம். இத்தனை தடைகளையும் மீறி காலைக்கதிர் கால் பதித்திருப்பது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

ஈழத்து இதழியல் பரப்பில் இலத்திரனியல் விநியோகத்தில் காலைக்கதிரின் மாலைப் பதிப்பு தனக்கெனத் தனியிடம் ஒன்றினைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. பத்திரிகைகள் எவையும் அச்சு வடிவத்தில் வெளிவர முடியாத காலத்தில், தினமும் – காலையும், மாலையும் வீட்டுக்குள் இருந்தவாறே உலக நடப்புகளை அறிந்துகொள்வதற்கு காலைக்கதிர் பெரும் பங்காற்றியிருக்கிறது.

வாசகர்களுக்குத் தேவையான விடயங்களைத் தேவையான நேரத்தில், தேவையான வடிவத்தில் தருகின்ற காலைக்கதிர் பத்திரிகை மென்மேலும் வளர்ந்து வியாபிக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன். தமிழ் மக்களுக்குப் பெரும் சொத்தாகக் கிடைத்திருக்கும் காலைக்கதிர் பத்திரிகைக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பேருவகை அடைகின்றேன்.

குறிப்பாக அதன் வெளியீட்டில் வேரூன்றி இருக்கும் ஆசிரியரையும், அதன் பணியாளர்களையும் வாழ்த்துவதோடு, அதன் வெளியீட்டாளர்களான பசுமை ஊடக நிறுவனத்தின் ஊடகப் பணி மேலும் சிறக்க என் ஆசிகளும், ஆதரவும் என்றென்றும் உண்டு

**வி. காண்டீபன்,**
**பதிவாளர்,**
**யாழ். பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணம்.**












# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்



## உலகம் முழுமையும் வியாபித்துள்ள 'காலைக்கதி'ருக்கு என் ஆசிகள்!

வட இலங்கைப் பத்திரிகை வரலாற்றில் காலையும் மாலையும் 'காலைக்கதிர்' வெளிவந்து ஒரு புதிய வரலாற்றைப் படைத்துள்ளது.

இந்தியாவில் காலையும், மாலையும் பத்திரிகைகள் வருகின்றமையைப் போல எம் மண்ணில் 'காலைக்கதிர்' புதியதொரு வரலாற்றை உருவாக்கியிருக்கின்றது. கிறீன் மீடியாவின் முயற்சியால் மாலைப் பத்திரிகை வெளிவரத் தொடங்கி ஓராண்டு பூர்த்தியடைவதையிட்டு எனது இதயபூர்வமான ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நவீன இலத்திரனியல் ஊடாக உலகம் முழுவதும் பத்திரிகைகளைப் படிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைக் 'காலைக்கதிர்' சரியாகப் பயன்படுத்தி வருகின்றமை பாராட்டுக்குரியது.

இந்த முயற்சியில் அயராது உழைக்கும் காலைக்கதிர் பத்திரிகையாளர்களுக்கு நாம் நன்றியுடையோராவோம். நண்பர், மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரனின் உன்னத பணிக்கு நன்றிகூறி அமைகின்றேன்.

**- கலாநிதி ஆறு.திருமுருகன்**
**(தலைவர்,தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தலைவர்,சிவபூமி அறக்கட்டளை)**



















# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

## தமிழ்த் தலைவர்களை ஒன்றுபடுத்த காலைக்கதிர் அரும்பணி ஆற்றட்டும்



'காலைக்கதிர்' பத்திரிகையின் மாலைப்பதிப்பின் ஓராண்டு நிறைவையொட்டி ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஈழத்து எழுத்து, இலக்கியத்துறைக்குப் பல்வேறு இலக்கியப் படைப்புக்கள் பங்களிக்கின்ற போதும் நமது மண்ணில் வெளிவருகின்ற தினசரிப் பத்திரிகைகளும் காத்திரமான பங்களிப்பை வழங்கி வந்துள்ளன. அவ்வகையில் காலைக்கதிர் பத்திரிகை அபரிமிதமான தாக்கத்தை இன்றைய பத்திரிகையுலகில் ஏற்படுத்திவிட்டது.

இந்தத் திறமை எப்படி ஏற்பட்டது என யான் பலமுறை சிந்திப்பதுண்டு. இப்பத்திரிகை சில ஆண்டுகள் வெளிவந்தாலும் இதன் ஆசிரியர் அன்பர் நடேசபிள்ளை வித்தியாதரன் இத்துறையில் பலவாண்டு அனுபவம் பெற்ற பழமாகவே காணப்படுகின்றமையை மற்றவர்கள் கூறக்கேட்டு யானும் மகிழ்வதுண்டு. இவரது இளமைக் காலத்துக் குறும்பு எழுத்துக்களைப் பார்த்து யானும் ரசித்ததுண்டு. இன்று நிலைமை தலைகீழாகி இலட்சிய எழுதாளனாகி விட்டார். அனுபவம் என்கிற சீப்பை இறைவன் தலைமயிர் உதிர்ந்த பிறகே கொடுக்கிறான். ஆனால் வித்திக்கு அனுபவம் என்கிற சீப்பை தலை மயிர் உள்ளபோதே கொடுத்துள்ளான். இதனை இறைவனின் அருட்கொடையாகவே எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

இது ஏனைய பத்திரிகையாளருக்கு ஒரு முன்னுதாரணமாகட்டுமே, இது ஒரு புறமிருக்க, இன்றைய அரசியற் சூழலில் தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபடவேண்டுமென்பதே எமது பெருவிருப்பு. இதனை நிறைவேற்றும் மனப்பக்குவமும், ஆற்றலும் வித்திக்கு மட்டுமே உண்டென்றால் மிகையாகாது. அதனை அவர் பத்திரிகை முன்னெடுக்க வேண்டும்.

காலைக்கதிரின் பணி பல்கிப் பெருக எமது வழிபடு தெய்வமான ஆடல் வல்லானை திரிகரண சித்தியோடு இறைஞ்சுகிறேன்.

ஈசான சிவசக்திகிரீவன்
(இந்து சமயப் பேரவை,
யாழ்ப்பாணம்)

## காலைக்கதிர் புதிய சரித்திரம்

கரணம் தப்பினால் மரணம் போன்றதோர் நிலை இப்போது இந்நாட்டில் கம்பியில் நடக்கும் வித்துவம் வேண்டும். இல்லையேல் விழுந்தால் எழும்ப முடியாதது - பத்திரிகைத்துறை.

சகலதிலும் வித்தை காட்டும் திறமை வித்திக்கு உண்டு. பத்திரிகை வெளியிடுவதே சவால்கள் நிறைந்தது. தினம் காலை, மாலை என இரண்டு வெளியீடுகள் - வித்தி! நீ ஒரு வீரன்; மகா வீரன்.

எமக்கு விடியாது காலைக்கதிர் பார்க்காது உலகம் அனைத்தும் உன் பத்திரிகையைப் பார்க்காது தாங்காது விழுத்திருப்பார்கள்.

புதிய சரித்திரத்தை உருவாக்கிய காலைக்கதிர் அனைத்து சிறப்புகளும் பெற்று வளமுடன் வாழ் வாழ்த்துக்கள்.

த. அருணகரிராஜா
(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்.










# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்



## ஓராண்டைக் கடக்கின்றது 'காலைக்கதிர்' மாலை தினசரி

- ப்ரியமதா பயஸ் -

இலங்கையின் வடக்கில் வெளிவரும் அச்சு ஊடகமான காலைக்கதிரின் ஒரு பெரும் பகுதியாக இன்று பல்லாயிரக்கணக்கான வாசகர்களை உலகம் முழுவதிலிருந்தும் இணையத்தில் தன்பால் இழுத்து வைத்திருக்கும் ஓர் இணையப் பத்திரிகையான காலைக்கதிர் தன் ஒரு வருட பூர்த்தியை இன்று காண்கிறது.

1974ஆம் ஆண்டிலிருந்து மின் நாளிதழ்களுக்கான முன் மாதிரி நுட்பங்கள் வளர்ந்தன என்பது பெரும் வரப்பிரசாதம். இலினாய்சு பல்கலைக்கழகத்தில் பிளேட்டோ முறைமையை பயன்படுத்தி இணையத்தில் மட்டும் பயன்படுத்துவதற்கு ஏதுவாக நாளிதழ்கள் அன்று தயாரிக்கப்பட்டன.

ஆனால் 1987ஆம் ஆண்டில் பிரேஸில்நாட்டு நாளிதழே மக்கள் சார் மின் நாளிதழை இணையத்தில் வெளியிட்டது. மின் நாளிதழ்கள் நடத்தும் நிறுவனங்கள் சில தினசரி நாளிதழ்களையும் சேர்த்தே வெளியிடுகின்றன. சில நிறுவனங்கள் மின் நாளிதழ்களை மட்டுமே வெளியிடுகின்றன.

அதுபோலத்தான் காலைக்கதிர் நாளிதழும் பெரும் சவால்களுக்கு மத்தியில் அச்சு இதழையும் மின் இதழையும் ஒருசேர வெளியிட்டது – இன்று அதன் வாசகர் வட்டம் உலகப்பந்தின் அனைத்து மூலையில் வாழும் தமிழர்களுக்கும் இலங்கை செய்தியை சுமந்து செல்லும் பெரும் சேவையாளனாக மாறி இருக்கிறது .

செய்திகள், செய்தி பத்திரிகைகளின் போக்கு, வளர்ச்சி, சவால்கள் என்பவை எழுத்தில் சொல்லி மாளாதவை. இலங்கையை பொறுத்தவரை ஊடக பரப்பு என்பது சாம்ராஜ்யங்களாகத்தான் இன்றுவரை காக்கப்படுகின்றன.

ஆனால் உலகளவில் 'த ஒப்சேர்வர்' உலகின் முதல் ஞாயிற்றுக்கிழமை செய்தித்தாள். இது இங்கிலாந்தில் இருந்து 1791 டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி வெளியானது. W.S.போர்ன் என்பவர் இதனை வெளியிட்டார். ஆரம்பத்தில் அரசின் மானியம் பத்திரிகைக்கு கிடைத்துள்ளது.

அதன் பிறகு எட்டு பேரிடம் கைமாறி உள்ளது. 16 பேர் ஆசிரியர்களாக இருந்துள்ளனர். மாறிய சூழல்களுக்கு ஏற்ப பத்திரிகையின் வளர்ச்சியும் ஏற்ற இறக்கமாக இருந்துள்ளது.

பர்சாத் பசோப்ட் எனும் ஒப்சேவரின் செய்தியாளர் 1990ல் ஈராக்கில் தூக்கில் போடப்பட்டார். அவர் உளவாளி என்ற குற்றச்சாட்டு, பிறகு உண்மையல்ல என ஒப்புக்கொள்ளப்பட்டது.

2008இல் முகமது நபி பற்றிய கார்ட்டூன்களை வெளியிட்டதால் எகிப்தில் ஒப்சேவர் தடைசெய்யப்பட்டது. இத்தனைக்கும் பின்தான் 2005 ஆம் ஆண்டு ஒப்சேவர் இணையத்துக்குள் நுழைந்தது. பத்திரிகையின் உள் நிர்வாகத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை மக்களுக்கு பகிரங்கப்படுத்துகின்ற பழக்கத்தை ஒப்சேவர் தொடங்கி வைத்தது.

இலங்கையின் வடக்கில் வெளியாகும் செய்தித்தாள்கள், செய்தி ஊடகங்கள் நடப்பவற்றை அப்படியே எடுத்துரைக்கின்றனவா என்றால் அது கேள்வி குறியே. தரமற்ற பத்திரிகை என்ற ரீதியில் வரிசைப்படுத்தப்பட்டால் கண்டிப்பாக அதில் பல பத்திரிகைகள் இடம் பெற்றிருக்கும்.

பொதுவாக ஒரு பத்திரிகையானது சில அடிப்படை அம்சங்களைக் கொண்டிருக்கவேண்டும்.

அதனுடைய உள்ளடக்கங்கள் மக்கள் ஏற்கும் வகையில் அமைந்திருத்தல்.

ஒரு குறித்த கால இடைவேளையில் வெளிவருதல்.

உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவல்கள் புதுப்பிக்கப்பட்ட நிலையில் இருக்க வேண்டும்.

பல்வேறு தலைப்புக்களை உள்ளடக்கியதாகச் செய்திகள் வெளிவருதல்.

காலமுறைப் பகுப்பு இருக்க வேண்டும்.

இத்தனையும் இணையும் பத்திரிகைகளை இப்போது காணக்கிடைப்பது மிக மிக அரிதாகவே உள்ளது. ஒரு பத்திரிகையின் ஆண்டு நிறைவில் ஏன் இவற்றை எல்லாம் கூறுகிறேன் என கொதிப்படையவேண்டாம்.

கூறவேண்டிய சமயத்தில் எது,எது முறையோ அதனைக் கூறியே ஆகவேண்டும். பத்திரிகைகளின் போக்கும் வெற்றியும் என்பது இலகுவானது அல்ல என்பதை புரிந்துகொள்ளவே இந்த வியாக்கியானங்கள் .

நாளிதழ்கள் பொதுவாக அரசியல், வணிகம், குற்றம், பொழுதுபோக்கு, விளையாட்டு முதலிய பல துறைகள் சார்ந்த செய்திகளைத் தாங்கி வருகின்றன. தவிர நாளிதழ்கள் செய்திகள் அல்லாத வேறு பல அம்சங்களையும் கொண்டிருப்பது உண்டு. முக்கியமாக, ஆசிரியர் தலையங்கம், வாசகர் கடிதம், கேலிச் சித்திரங்கள், கதைகள், சோதிடம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மேற்குறிப்பிட்டவை மக்களுக்குத் தகவல்களையும், பொழுதுபோக்கையும் வழங்கக் கூடிய அம்சங்களாகும். இவற்றுக்காகவே மக்கள் நாளேடுகளைப் பணம்கொடுத்து வாங்கி வாசிக்கிறார்கள்.

இதனால் இவ்வாறு மக்கள் விரும்பும் அம்சங்களை வழங்குவதற்காக நாளிதழ்களை வெளியிடும் நிறுவனங்கள் பெருமளவு பணத்தைச் செலவு செய்வதுண்டு.

இவைதவிரநாளிதழ்களில்இடம்பெறும்சிலஅம்சங்களைவெளியிடுவதற்காக வெளியீட்டு நிறுவனங்கள் பணம் பெற்றுக் கொள்வதும் உண்டு.

இப்போது எல்லோரின் கைகளையும் அலங்கரிப்பது கை தொலைபேசிகள் மட்டுமே. முன்பெல்லாம் அடிக்கடி நேரத்தை பார்க்க கைகளில் கைக்கடிகாரங்களை எல்லோரும் கட்டிக்கொள்வார்கள். ஆனால் இப்போது யார் கைகளிலும் கடிகாரம் இல்லை. மணிக்கட்டில் இருந்து உள்ளங்கைக்கு மொபைல் வடிவில் வந்துவிட்டது கடிகாரம். இப்போதெல்லாம் முழத்துக்கு முழம் மணிக்கூட்டுக் கடைகள் இல்லை. முழத்துக்கு முழம் தொலைபேசிக்கடைகள்தான் இருக்கின்றன. இதுவே நாம் செய்தித்துறையிலும் மாறவேண்டியதை கட்டியமாக கூறி நிற்கும் ஒரு உண்மை விடயம் .

இனி பத்திரிகை அச்சு காரியாலயங்களைவிட இணையத்துடன் இணைந்த வடிவமைப்பாளர்களும் செய்திகளும் இருந்தால் போதும் என்கின்ற சூழல் பெருமளவு வந்துவிட்டது .

காலத்துக்கு ஏற்ப நாம்தான் மாறவேண்டும். இப்போது அச்சுப் பத்திரிகைகளை விட இணைய பத்திரிகைகள்தான் மக்களையும் தேவைப்படுவோரையும் மிக இலகுவில் சென்றடைகிறது .

பொதுவான நாளேடுகள் பல்வேறு வகையான வாசகர்களைக் கவர்வதற்காகத் தனியான அம்சங்களையும் வெளியிடுகின்றன.

எடுத்துக்காட்டாக, பெண்களுக்கான பகுதி, மாணவர்களுக்கான பகுதி, சினிமாப் பகுதி, வேளாண்மை, கலை, விளையாட்டுப் பகுதி போன்றவற்றைக் குறிப்பிடலாம். சில நாளிதழ்கள் குறிப்பிட்ட கிழமைகளில் மட்டும் இலவசமாக தனி இதழ் ஒன்றையும் நாளிதழுடன் கூடுதலாக அளிக்கின்றன.

நாளிதழ்கள் வாசித்தபின் அன்றே எறிந்துவிடக் கூடியவை என்பதால், நாளிதழ்களைப் பதிப்பிக்கும் தாள்கள் உயர்ந்த தரமுள்ளவையாக இருக்கவேண்டியதில்லை. இதனால் குறைந்த தரம் கொண்ட தாள்களிலேயே நாளிதழ்கள் அச்சடிக்கப்படுகின்றன. இப்போது அந்த செயற்பாடுகள் எல்லாவற்றுக்கும் மின்னிதழ்கள் முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றன.

இப்போதைய காலம் ஊடகங்கள் தம் நிலையில் இருந்து மாறிவிட்டன என்கின்ற ஒருசேர குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. எந்த உண்மை தெரிந்தாலும் அதை அப்படியே பிரசுரிக்க முடியாது. உங்கள் மேலிடம், அதாவது பணம் போட்டு பத்திரிகை நடத்துபவர், இந்த செய்தியை போடக்கூடாது என்றாலோ, நான் சொல்வது போல திருத்திப் போடுங்கள் என்றாலோ நீங்கள் அது படிதான் செய்தி வெளியிட வேண்டும்.

உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப சரியான செய்தி வெளியிட முடியாது. பத்திரிகை தர்மம் என்பது காணாமல் போய் நாளாகிவிட்டது.

பிரஸ் மீட் என்றால் அறிக்கைகளை வாங்கி அனுப்புவது என்று ஆகிவிட்டது. வாட்ஸப்பில் வரும் எத்தனையோ விடயங்கள் பத்திரிகையில் வருவது இல்லை. பல செய்திகளை ஆழமான விடயங்களை யூடியூப் சனலில் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அவை பத்திரிகையில் வருவதில்லை என்கின்ற குறைக்கு காரணம் அச்சு பதித்தலை வாசிப்பதில் மக்களுக்கு இல்லாமல்போன இரசனைதான்.

அதனைத்தான் இணையப் பத்திரிகைகள் ஈடு செய்கின்றன. அந்தவகையில் இலங்கையின் தமிழர்களை உலகளவில் பரந்துபட்டு ஒன்றாக்கி வைத்துள்ளது காலைக்கதிர் இணைய இதழ் .

மக்களின் நலன் என்பது கடைசியில் வரும் தெரிவாகப் பத்திரிகை தர்மமும் வந்து விட்டது. இந்த காலத்தில் இணையவழி மக்களை ஒன்றாக்கி வைத்திருக்கும் காலைக்கதிர் ஓராண்டை கடக்கிறது. மகிழ்வுடன் வாழ்த்துவோம் .

எமக்காக நாமாவோம் YAM SRI LANKA Youth Awareness Movement Sri Lanka

- Improve the hygienic conditions of vulnerable communities
- Respond to relief and recovery of the people affected by natural and pandemic disasters
- Support women-headed and marginalized families for livelihood enhancement
- Distribution of dry rations for extreme poor families
- Education, skills & Leadership development support to students from marginalized communities
- Reroofing and Sanitation assistance for women in need.
- Create linkages for jobs and markets towards poverty reduction





Donate to help the poor
Alleviate poverty
Donate Us
Account Name: YAMSL
Bank Name: Commercial Bank
Swift Code: 7056
Branch Code: 6-Jaffna
Account Number: 1000363000

Youth Awareness Movement Sri Lanka is a Volunteer Social Service Organization registered under Voluntary Social Services Organizations Act, No.31 of 1980 as amended by Act, No.8 of 1998. Registration No: J/DS/SS/NGO/83

# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

## யாழ்.மறைமாவட்ட பேராயரின் வாழ்த்து



காலைக்கதிர் பத்திரிகையின் மாலைப்பதிப்பு வெளிவரத் தொடங்கி ஓர் ஆண்டு நிறைவடைகின்ற நிலையில் இப்பணியை ஆற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் திரு நடேசபிள்ளை வித்தியாதரன் அவர்களையும் துணை நிற்கும் குழுவினரையும் வாழ்த்த விரும்புகிறேன்.

இலங்கையில் ஒரு தினசரிப் பத்திரிகை ஒன்று தனது அன்றாடக் காலைப் பதிப்புடன் மாலைப்பதிப்பு ஒன்றை வெளியிடத் தொடங்கி தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டுடில் கால் பதிக்கும் சாதனையைப் படைத்த ஒரே பத்திரிகை காலைக்கதிர் பத்திரிகையாகும்.

மாலைப்பதிப்பு பத்திரிகைக்குப் பழக்கப்படாத வடபகுதி மக்கள மத்தியில் மாலைப்பதிப்பு ஒன்றை முதலில் அச்சில் வெளியிட்டு மக்களின் மனதை நாடி பிடித்துப் பார்த்த பின்னர் அதனை நேரலை மூலம் வெளியிடுவது ஒரு சிறந்த யுக்தியாகும்.

தமிழ்ப் பத்திரிகை உலகில் நேரலை மூலம் பத்திரிகை ஒன்றை வெளியிடுவதன் வழி ஒரு புதிய சகாப்தம் ஒன்றைத் தொட்ட காலைக்கதிர் பத்திரிகை என்றும் பாராட்டப்பட வேண்டிய பத்திரிகையாகும்.

இப்பணி மேலும் பல வழிகளில் வளர வாழ்த்துகிறேன்.

**அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்**
**யாழ் மறைமாவட்ட**
**பேராயர்**







# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

## கதிரவேனே வாழி...

இருவேளைகளில்
எம் இதயவாசல் வந்து....
வாசகர்கள்
எமக்கு செய்திகளை தந்து....
தமிழர் பண்பாட்டை
உலகறியச்செய்து
நெடுந்தீவிலிருந்து
நெதர்லாந்து வரை
நெடுந்தூர செய்திகளை
நொடியதனில்
தந்து செல்லும்
காலச்சூரியனே....

குறுகிய நாட்களில்
எம் இதயங்களில்
இடம்பிடித்த
காலைக்கதிரே....
நீண்டகாலம்
தமிழர் எம்வாழ்வில்
கதிர்பரப்பி
உலகமெல்லாம்
எம் தமிழை
உன்னதமாய் சேர்ப்பிக்க
உளமார
வாழ்த்துகின்றேன்
வானுயர வாழியவே.....

ஆக்கம் -
ஜொணி மதுரநாயகம்



## அவைத் தலைவரின் வாழ்த்து



யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு வெளிவரும் காலைக்கதிர் பத்திரிகையின் மின்னஞ்சல் மாலைப் பதிப்பு வெளியீடு அதன் ஒரு வருட சேவையை இன்றுடன் பூர்த்தி செய்வது பற்றி எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

காலைக்கதிர் ஆசிரியரின் ஒரு முன்மாதிரியாகவே அப்பத்திரிகை முதன் முதலில் இங்கு மின்னஞ்சலாக வெளியிடப்பட்டது.

கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் இந்த மின்னஞ்சல் மாலைப் பதிப்பு, பல்வேறு செய்திகளை முந்திக் கொண்டு வழங்குவதில் பெற்றி பெற்றிருக்கிறது என்பதில் ஐயமில்லை. கொவிட் 19 காலத்தில் மின்னஞ்சல் பதிப்பு எல்லோருக்கும் உடனுக்குடன் செய்திகளை வழங்கி வந்தமை பாராட்டுக்குரியது.

மேலும் பத்திரிகை ஆசிரியரின் scoop news என்று கூறப்படும் மற்றவர்களுக்கு முன்னர் செய்திகளை வெளியிடும் ஆற்றல் இந்தப் பதிப்பில் அதிகம் காணப்படுவது விசேட அம்சமாக குறிப்பிடலாம்.

இந்தப் போட்டியான துறையில் ஊடக தர்மத்தை பேணிக் கொண்டு மேலும்சிறப்பானவளர்ச்சிபெறஎமதுவாழ்த்துக்களும்பிரார்த்தனைகளும்.

சீ.வீ.கே.சிவஞானம்
அவைத் தலைவர்
வடமாகாண சபை.






# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

# இன்னும் பலமடங்கு பாயவேண்டிய தேவையுண்டு

## ஒரு வாசகனின் பார்வையில் காலைக்கதிர்

●உதயகீரன்



கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் உலக நாடுகள் பலவற்றிலும் ஊடகங்கள் கடும் பாதிப்பைச் சந்தித்தன. அதற்கு முன்னரே கூட நவீன ஊடகங்களின் வருகை மற்றும் பரவல் காரணமாக பாரம்பரிய ஊடகங்களான பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பன பலத்த சவாலைச் சந்தித்திருந்தன. இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சிப் பாய்ச்சலை எதிர்கொள்வதற்குத் தயாராகத நிலையில் ஊடகங்கள் பல அப்போதே நலிந்து களத்தைவிட்டு அகலவதற்குத் தயாராக இருந்த நிலையில் கொரோனா அதனை அப்படியே அடித்துத்துடைத்தழித்துவிட்டது.

இந்தச் சூழ்நிலைகளால் அதிகம் பாதிக்கப்பட்டவை என்று ஈழத் தமிழ்ப் பத்திரிகைகளைச் சொல்லலாம். ஈழத் தமிழ்ப் பத்திரிகைகள் 1980களுக்குப் பின்னர் தெற்கில் கொழும்பையும் வடக்கில் யாழ்ப்பாணத்தையும் தலைமையிடமாகக் கொண்டு வளர்ச்சிபெற்றிருந்தன. கொழும்பில் இருந்த பத்திரிகைகளுக்கு வசதிகளும் வாய்ப்புக்களும் சீராக இருந்த காரணத்தால் அவற்றின் வளர்ச்சி தொழில்நுட்ப ரீதியில் கணிசமானதாக இருந்தது. ஆனால், வடக்கில் பத்திரிகைகளை அச்சிடுவதே தலையால் கிடங்கு தோண்டும் பணியாக இருந்த நிலையில் அவை தொழில்நுட்ப ரீதியிலும் பார்க்க உள்ளடக்க ரீதியில் பெரும் வளர்ச்சியைப் பெற்றிருந்தன. குறிப்பாக தமிழ்த் தேசியம் என்று சொல்லப்படும் உள்ளடக்கத்தில் அவற்றின் பங்கு மிகப் பெரியதாக இருந்தது.

இருந்தாலும் போருக்குப் பின்னரான சூழலில் தமது உள்ளடக்கம் மற்றும் நுட்பவியல் ரீதியில் தம்மைப் போட்டிச் சந்தைக்குத் தயாராக்கத் தவறியதன் காரணமாக யாழ்ப்பாணப் பத்திரிகைகள் பெரும் சவாலைச் சந்தித்தன. கொரோனா காலம் கிட்டத்தட்ட இவற்றுக்குச் சாவுமணி அடிக்கும் நிலையை ஏற்படுத்தியது.

இந்த நிலைமை எதிர்ப்புக்கு அப்பாற்பட்டதொரு நிலையாக இருக்கவில்லை. உலக நாடுகள் பலவற்றினதும் அனுபவங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டு சூழலுக்கேற்பத் பத்திரிகைகளைத் தகவமைத்துக்கொள்ளத் தவறிய அவற்றின் நிர்வாகிகளால் ஏற்பட்டதே இந்தப் பரிதாப நிலை. இது யாழ்ப்பாணத்திற்கு மட்டுமல்ல, கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கிய பத்திரிகைகளுக்கும் இதுதான் நிலமை. இதுபோன்று தனது இருப்புக்கே பெரும் சவாலைச் சந்தித்து நின்ற பத்திரிகைகளை, பனையால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதையாக கொரோனாவும் பந்தாடியது.

இந்தப் பாதிப்புக்களில் இருந்து எழுந்து நின்று தம்மை நிலைப்படுத்திக்கொள்வதற்கே பெரும் சிரமப்படும் நிலையிலேயே இன்றைய யாழ்ப்பாணப் பத்திரிகை நிறுவனங்கள் உள்ளன. இங்குள்ள பத்திரிகை நிறுவனங்களில் பெரும்பாலும் அலுவலகச் செய்தியாளர் ஒருவர் கூட இல்லை என்கிற நிலைமையே தற்போதிருக்கின்றது என்பதே அவற்றின் உண்மை நிலையை உணர்த்துவதற்குப் போதுமானது. சுயாதீனச் செய்தியாளர்களின் அறிக்கையிடலிலேயே இன்றைய பத்திரிகைகள் அனைத்தும் தங்கியிருக்கின்றன. அதுவே பத்திரிகைகள் பல இருந்தாலும் செய்திகள் அனைத்தும் ஒரே மாதிரியானவையாக இருப்பதற்குக் காரணம். சுயாதீனச் செய்தியாளர்கள் வட்டாரமோ அல்லது அவர்களுக்கான பத்திரிகையாளர் அமைப்போ ஒரு மாபியா கும்பல் போன்று செயற்படும் நிலையில் தொழில் தரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது.

இத்தனை சவால்களுக்கும் மத்தியில் அடுத்த தலைமுறைக்கும் பத்திரிகையைக் கொண்டு செல்வதற்கு என்ன வழி என்பதைச் சிந்திக்க அனைவரும் தள்ளப்பட்டிருந்த நிலையில்தான் காலைக்கதிர் பத்திரிகை அதற்கான வழிவரைபடத்தை அனுபவரீதியாக வரைந்து காட்டியது. தொடங்கியது முதல் பல சவால்களுக்கு மத்தியில் அச்சிதழாக வந்த காலைக்கதிர், உலகம் முழுவதும் பத்திரிகைகள் எதிர்கொண்ட பாதகமான களச்சூழல் காரணமாகத் தொடர்ந்தும் அச்சுப் பதிப்பாக வெளிவர முடியாத நிலையில் சூழலுக்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக்கொண்டது சிறப்பானது. அதுவே கொரோனா நெருக்கடிக் காலப் பகுதியில் மற்றைய பத்திரிகைகளுக்கும் வழிகாட்டியாகவும் அமைந்தது.

தனது அச்சுப் பதிப்பை நிறுத்தியபோதும் சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையம் ஊடாகத் தனது பாரம்பரியப் பத்திரிகை வடிவத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் புதிய முயற்சியை காலைக்கதிர் தொடங்கியது. தொடக்கத்தில் மற்றைய பத்திரிகைகளால் இந்த முயற்சி ஒரு தோல்வியுற்றவனின் இயலாமை வெளிப்பாடாகப் பார்க்கப்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால், காலம் அந்த முயற்சி ஒரு தீர்க்கதிரிசனமான நகர்வு என்று பறைசாற்றியிருக்கிறது இன்று.

உலக நாடுகள் பலவற்றிலும் பரவிப் பரந்திருக்கும் தமிழர்களை நவீன தொழில்நுட்பம் விரல் நுனியில் இணைத்து வைத்திருந்தாலும் அதன் முதல் தலைமுறையினரை (அதாவது தாயகத்தில் பத்திரிகைகளைப் படித்து அனுபவப்பட்டவர்களை) ஒருங்கிணைப்பதற்குத் தவறியிருந்தது. அல்லது அதற்கான முயற்சிகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பத்திரிகை வாசிப்பு என்பது ஒரு படிப்பு மட்டுமல்ல அது போதையைப் போன்றதும்கூட. அது பழக்கப்பட்டவர்களுக்கு நாளாந்தம் அந்தப் போதை தேவையானது. யாழ்ப்பாணத்தில் அல்லது இலங்கையின் வேறு எந்தப் பாகத்திலானாலும் பத்திரிகை வாசகராக இருந்த ஒருவருக்கு அதனைப் படிப்பதற்குக் கிடைக்காமல்போவதென்பது பெரும் இழப்பாக மன உளைச்சலைக் கொடுக்கக்கூடியது. அவர்களுக்கு செய்தி இணையத் தளங்களும், சமூக ஊடகங்களும் இந்தப் பொச்சத்தைத் தீர்க்கக்கூடியனவல்ல.

காலைக்கதிர் பாரம்பரிய அச்சுவடிவத்தில் இணையப் பரப்பில் பரவத் தொடங்கியதும் முதலில் திருப்திப்படுத்தியதும் ஒருங்கிணைத்ததும் இவர்களைத்தான். அதனால் இப்போது காலைக்கதிர் பத்திரிகைக்கு உலகின் பல நாடுகளிலும் வாசகர்கள் இருக்கின்றார்கள். இது எந்தவொரு தமிழ்ப் பத்திரிகைக்கும் கிடைத்திருக்க முடியாத ஒரு வரப்பிரசாதம் இது.

இணையத்தில் கட்டணம் செலுத்தி இங்குள்ள பத்திரிகைகளின் மின்னதழ்களைப் படிப்பதற்கான வசதி இருக்கின்றபோதும் காலைக்கதிர் இலவசமாகவே கிடைக்கின்றது என்பதால் அது இன்னும் அதிகளவான வாசகர்களையும் நாடுகளையும் சென்றடைய முடிந்திருக்கின்றது. இன்னும் முக்கியமாக இளையவர்களையும் அதனால் எட்டிப்பிடிக்க முடிந்திருக்கின்றது.

பாரம்பரியப் பத்திரிகைகள் தமது இருப்புக்குப் பெரும் சவாலை எதிர்கொண்டிருந்த ஒரு களச்சூழலில் காலைக்கதிர் அவற்றின் இருப்புக்கான புதிய வழியைக் காட்டியது. கொரோனா காலத்தில் அச்சில் தம்மை முன்னணிப் பத்திரிகைகளாகக் காட்டிவரும் ஏனைய அனைத்துப் பத்திரிகைகளுமே காலைக்கதிரின் பாதையில்தான் பயணித்தன என்பதே அதற்கான சான்று.

தேவைகள்தான் புதிய வழிகளை உருவாக்குகின்றன. அந்த வகையில் காலைக்கதிர் எதிர்கொண்ட சவல்கள் மொத்தப் பத்திரிகை உலகிற்கும் புதிய வழியைத்திறந்துவிட்டது.

ஆனால், காலைக்கதிரின் இப்போதைய நிலை போதுமானதாக இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. அது உள்ளடக்க ரீதியிலும் நுட்பத்திறன் ரீதியிலும் இன்னும் மேம்படுவதற்கும் வளர்வதற்கும் எவ்வளவோ இருக்கின்றன. அதற்கான முயற்சிகளை பத்திரிகையைப் பொறுப்பெடுத்திருக்கும் கிறீன் கவுஸ் மீடியா தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும்.

காலைக்கதிரை புதிய உரிமையாளர் பொறுப்பெடுத்ததைத் தொடர்ந்து அதன் மாலைப் பதிப்பை அச்சிதழாகவும் மின்னிதழாகவும் கொண்டு வருவதற்கான முயற்சியில் இறங்கி ஒரு வருடத்தை இன்று கடந்திருக்கிறார். கொரோனா சவால்களால் மாலை என அச்சுப் பதிப்பு சாத்தியமில்லாததாக மாறிய தருணத்தில் அதையே காலை அச்சுப்பதிப்பாகவும் கொண்டு வந்து கல்லில் நார் உரிக்கும் தமது முயற்சியை அவர் தொடர்கிறார். இந்தக் காலப் பகுதிக்குள் நாள்தவறாமல் காலை மாலை இரு பதிப்புக்களையும் கொண்டு வருவதென்பது இலகுவான காரியமல்ல என்பது பத்திரிகை உலகை அறிந்த அனைவருக்கும் தெரியும். அதைப் பாரத்தாலோ என்னவோ ஒரு வருடத்திற்கு முன்னர் வந்திருந்த அதே நிலையிலேயே இன்னும் வந்துகொண்டிருக்கின்றது பத்திரிகை. அதாவது இந்த ஒரு வருட காலத்தில் அதனது வளர்ச்சிப் படிமுறைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

வேகமான உலகில் முதலில் உருவாக்குவது மட்டுமல்ல அதனைத் தக்கவைப்பதும் மிகவும் அவசியமானது. அதற்கான முயற்சிகள் அவசியம். ஒரு வருட முடிவில் கிறீன் மீடியா கவுஸ் அதிகம் கவனம் செலுத்தவேண்டிய பகுதி இது என்பது எனது அவதானிப்பு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனுக்கு ஆதரவாகவும் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு எதிராகவும் ஒரு நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக காலைக்கதிர் தனது உள்ளடக்கங்களை வடிவமைக்கின்றது என்பது பரவலான குற்றச்சாட்டு. அதுபோன்று அதிகம் தேசியம் பேசுபவர்களாகத் தம்மை இனம்காட்டும் கட்சிகளுக்குப் போதிய இடம் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு.

ஒரு பத்திரிகையாக அரசியல் கருத்துக்களைக் கொண்டிருக்கும் எல்லா உரிமையும் காலைக்கதிருக்கு உண்டு. அதனை தனது கருத்துக் களங்களிற்குள் மட்டுப்படுத்திக்கொண்டு அந்தக் கருத்தின் தாக்கம் செய்திகளில் பிரதிபலிப்பதைத் தவிர்ப்பதன், தடுப்பதன் மூலம் இனிவரும் காலங்களில் தன்னை அனைத்துத் தரப்பு வாசகர்களுக்குமான பத்திரிகையாக நிலைநிறுத்திக் கொள்வதிலும் காலைக்கதிர் கவனம் செலுத்தவேண்டும்.

மிகச் சவாலானதொரு காலகட்டத்தைக் கடந்திருக்கும் காலைக்கதிரின் புதிய முகாமைக்கும் ஆசிரியபீடத்தினருக்கும் ஏனைய பணியாளர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவிக்கும் நேரத்தில் நீங்கள் நிகழ்த்தவேண்டிய பாய்ச்சல் இன்னும் வீரியம்மிக்கதாக அமையவேண்டியது அவசியம் என்பதையும் இந்தத் தருணத்தில் ஞாபகப்படுத்தவேண்டியிருக்கிறது.

# புடினை கொலையாளி என ஜோ பைடன் விமர்சனம் அமெரிக்கா – ரஷ்யா இடையே மோதல் அதிகரிக்கிறது

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் குடியரசு கட்சி வேட்பாளரான அப்போதைய அதிபர் ட்ரம்புக்கு ஆதரவாகவும், ஜோ பைடனை தோற்கடிக்கவும் ரஷ்ய அதிபர் புடின் முயற்சித்ததாக அமெரிக்க உளவுத்துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தது.

ஜோ பைடன் மீது தவறான, நிரூபணம் ஆகாத குற்றச்சாட்டுகளை ட்ரம்ப் ஆதரவாளர்கள் மூலம் பரப்ப புடினும் அவரது நிர்வாகமும் முயற்சித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஏற்கனவே ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னிக்கு விஷம் கொடுக்கப்பட்ட விவகாரத்தில் அதிபர் புடினுக்கும், அவரது நிர்வாகத்துக்கும் அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது.

மேலும் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அலெக்சி நவால்னியை விடுவிக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. இதற்கிடையே அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு தொடர்பான அறிக்கை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில், அதிபர் தேர்தலில் புடின் தலையீடு குறித்து அமெரிக்க அதிபர் ஜோபைடனிடம் கருத்து கேட்கப்பட்டது. அவர் கூறும்போது, அதற்கான விலையை புடின் கொடுப்பார், அவர் ஒரு கொலையாளி என்று விமர்சனம் செய்தார்.



இதையடுத்து வொஷிங்டனில் உள்ள அமெரிக்காவுக்கான ரஷ்ய தூதர் அனடோலி அன்டோனோவ்வை நாடு திரும்ப ரஷ்ய அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அமெரிக்காவுடனான உறவுகளின் பின்னணியில் என்ன செய்ய வேண்டும் என்பதை பகுப்பாய்வு செய்யும் நோக்கத்துடன் ஆலோசனை நடத்துவதற்காக ரஷ்ய தூதர் மாஸ்கோவுக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளது.

ரஷ்ய துணை வெளியுறவு மந்திரி செர்ஜி ரியாப்கோவ் கூறும்போது, ரஷ்ய – அமெரிக்க உறவுகள் மேலும் மோசம் அடைவதற்கான பொறுப்பு அமெரிக்காவிடம் தான் முழுமையாக உள்ளது என்றார். இதனால் அமெரிக்கா – ரஷ்யா இடையே மோதல் போக்கு முற்றுகிறது.

## டுவிட்டரை ஹக் செய்த இளைஞருக்கு 3 ஆண்டுகள் சிறை



முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, தற்போதைய அதிபர் ஜோ பைடன், டெஸ்லா நிறுவனர் எலன் மஸ்க், பில் கேட்ஸ் என பல பிரபலங்களின் டுவிட்டர் கணக்குகளை முடக்கி அதன் மூலம் மோசடி செய்த 18 வயதான ஹக்கர் கிரஹாம் இவான் கிளார்கிற்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்ட அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில் அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால் ப்ளோரிடா நீதிமன்றம் அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது. இந்தத் தண்டனையின் போது அவர் டிஜிட்டல் சாதனங்களை சில நிபந்தனைகளுடன் பயன்படுத்தலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் முதல் அவர் சிறையில் உள்ளதால் குறித்த காலப்பகுதியில் சிறையில் கழித்த 229 நாள்களும் இந்தத் தண்டனைக் காலத்தில் கணக்கிடப்படும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

டுவிட்டர் வரலாற்றில் மிகப்பெரிய சைபர் தாக்குதலாகக் கருதப்படும் இந்தச் சம்பவத்தில் மேலும் சில ஹக்கர்களுக்குத் தலைமை தாங்கி அப்போது பதினேழு வயதான க்ளார்க் ஈடுபட்டிருந்தமை நினைவுபடுத்தத்தக்கது.

## பங்களாதேஷ் மருத்துவமனை விபத்தில் 3 கொரோனா பாதிப்பாளர்கள் மரணம்



பங்களாதேஷின் அரசாங்க மருத்துவமனையொன்றில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் மூன்று கொரோனா நோயாளிகள் பலியாகியுள்ளனர்.

தலைநகரில் உள்ள டாக்கா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் 14 நோயாளிகள் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. அங்கிருந்த அதிக அழுத்தம் கொண்ட ஒட்சிசன் சேமிப்புக் கருவி வெடித்ததில் இந்த தீ விபத்து நிகழ்ந்ததாக மருத்துவமனையின் இயக்குநர் நஸ்மல் ஹக் தெரிவித்துள்ளார்.

நேற்று காலை 8 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டதும் அங்கிருந்து ஏனைய நோயாளிகள் வேறு இடத்துக்கு பாதுகாப்பாக மாற்றப்பட்ட போதும் மூன்று கொரோனா நோயாளிகளைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் அனைவரும் செயற்கை சுவாசக் கருவியின் உதவியோடு சிகிச்சை பெற்று வந்த தீவிர கொரோனா பாதிப்பாளர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தன்ஸானியா ஜனாதிபதி கொரோனாவால் மரணம்

கிழக்கு ஆபிரிக்க நாடான தன்ஸானியாவின் 61 வயதான ஜனாதிபதி ஜோன் மகுபுலி கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளார். கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இதய செயலிழப்பு காரணமாக அவர் உயிரிழந்துள்ளார்.

வீரம் பொருந்திய தலைவரை தன்ஸானியா இழந்திருப்பதாகத் தெரிவித்துள்ள அந்நாட்டின் உப ஜனாதிபதி, 14 நாள்கள் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும் எனவும் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

அந்நாட்டு அரசியலமைப்பின்படி தன்ஸானியாவின் 5 ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜோன் மகுபுலியின் எஞ்சிய பதவிக்காலம் நிறைவு செய்யப்படும் வரை அந்நாட்டின் தற்போதைய உப ஜனாதிபதி Hassan ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐக்கிய அரபு அமீரகம் ஏவும் புதிய சூழலியல் செயற்கைக்கோள்

காற்று மாசுபாடு தொடர்பான கண்காணிப்பு மற்றும் கணிப்பீடுகளைச் செய்வதற்காக 'டி எம் சற் 1' என்ற புதிய செயற்கைக்கோள் ஒன்றை ஐக்கிய அரபு அமீரகம் உருவாக்கியுள்ளது. மொஹமட் பின் ரஷிட் விண்வெளி ஆய்வு மையத்தோடு டுபாய் மாநகரசபை இணைந்து இந்தச் செயற்கைக் கோளை உருவாக்குவதற்கான பணி மேற்கொள்ளப்பட்டது.

இம்மாதம் 20ஆம் திகதி அமீரக நேரப்படி காலை 10.07 இற்கு கஸகஸ்தான் நாட்டில் உள்ள பைக்கனூர் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து இது விண்ணுக்குச் செலுத்தப்படவுள்ளது. 15 கிலோ எடை கொண்ட இந்தச் செயற்கைக்கோள் டொரண்டோ பல்கலைக்கழகத்தின் விண்வெளி ஆய்வகத்தில் கட்டமைக்கப்பட்டது. இதன் மூலம் கிடைக்கும் தகவல்கள்



அமீரக சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாடு தொடர்பான அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டு பதிவு செய்யப்படும். இந்தத் தகவல்களைக் கொண்டு ஐக்கிய அரபு அமீரகத்தில் இருக்கும் காற்று மாசுபாடு குறித்து கணிப்பிட முடியும்.

இந்தச் செயற்கைக் கோளின் இன்னுமொரு முக்கிய பணி, வளிமண்டலத்தில் உள்ள பசுமை இல்ல வாயுக்களின் அளவையும் தூசுத் துணிக்கைகளையும் அளவிடுவதாகும். இதன் மூலம் அடுத்து ஏற்படக்கூடிய அபாயங்களை முன்கூட்டி அறிவதோடு பாதிப்புக்களைக் குறைப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபடமுடியும்.

அமீரகம் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் அடிக்கடி வீசும் புழுதிக் காற்று காரணமாக பொதுமக்களுக்கு சுவாசக் கோளாறு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. இந்தக் காற்று மாசுபாட்டு அளவுகளை அறிந்து கொண்டு அதற்கேற்ப பொதுமக்களை எச்சரிக்கை செய்வதற்கும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்தச் செயற்கைக் கோள் உறுதுணையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## இந்தியாவில் ஒரே நாளில் புதிதாக 35,871 பேருக்கு கொரோனாத் தொற்று

இந்தியாவில் நேற்று மட்டும் புதிதாக கொரோனா தொற்று கண்டறியப்பட்டோரின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 871ஆக அதிகரித்துள்ளது.தற்போதைய நோயாளிகளின் எண்ணிக்கை 2 லட்சத்து 52 ஆயிரத்து 364 ஆக உயர்ந்துள்ளது.

அதிக அளவாக மகாராஷ்டிராவில் நேற்று ஒரே நாளில் புதிதாக கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டோர் எண்ணிக்கை 23 ஆயிரத்து 179ஆகவும், தற்போதைய நோயாளிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 760 ஆகவும் உள்ளது.

குஜராத்தின் அகமதாபாத்தில் கொரோனா பரவலைத் தடுக்கும் வகையில் அரசுப் பஸ் போக்குவரத்து இன்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது. அனைத்துப் பூங்காக்களும் மூடப்பட்டுள்ளன என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மேற்கு வங்க பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் இன்று பங்கேற்கின்றார் பிரதமர் மோடி



மேற்கு வங்கத்தில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள புரூலியாவில் பிரதமர் நரேந்திர மோடி இன்று தேர்தல் பொதுக் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

மேற்கு வங்கத்தில் முதற்கட்டமாக 30 சட்டமன்றத் தொகுதிகளில் மார்ச் 27ஆம் நாள் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. அதையொட்டிப் புரூலியா மாவட்டத்தில் இன்று நடைபெறும் பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

அதற்காக மேடை, வரவேற்பு, பாதுகாப்பு என அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ள நிலையில், பா.ஜ.க. தொண்டர்கள் உடலில் வண்ணம் பூசித் தாமரைச் சின்னத்தை வரைந்துகொண்டுள்ளனர்.

## புதுச்சேரியில் களைகட்டும் தேர்தல் திருவிழா..!

புதுச்சேரியில் அனைத்துக் கட்சிகளும் வேட்பாளர்களை அறிவித்து விட்ட நிலையில், அங்கு வேட்புமனுத்தாக்கல் இடம்பெற்றுள்ளது.

புதுச்சேரியில் காங்கிரஸில் இருந்து விலகி பா.ஜ.கவில் இணைந்த முன்னாள் அமைச்சர் நமச்சிவாயம் மண்ணாடிப்பட்டு தொகுதியில் போட்டியிட வில்லியனூர் தாலுகா அலுவலகத்தில் வேட்பு மனு செய்தார்.

மனவலி தொகுதியில் போட்டியிடும் பா.ஜ.க. மாநில பொதுச்செயலாளர் ஏம்பலம் செல்வம், புதுச்சேரி தொழில் துறை அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். அங்கு காங்கிரஸ் அரசு கொறடா அனந்தராமனை எதிர்த்து அவர் போட்டியிடுகிறார்.

என்.ஆர். காங்கிரஸ் தலைவர் ரங்கசாமி ஏனாம் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

காங்கிரஸில்இருந்துவிலகிஎன்.ஆர். காங்கிரஸில் சேர்ந்த சுற்றுலாத்துறை அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவ் தலைமையில் சென்று அவர் வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

ஏனாம் தொகுதியில் ரங்கசாமிக்கு எதி ராக காங்கிரஸில் யார் களமிறங்குகிறார்கள் என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை.

கடந்த 15ஆம் திகதி தட்டாஞ்சாவடி தொகுதிக்கும் ரங்கசாமி வேட்பு மனுத் தாக்கல்செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

புதுச்சேரி தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள அ.தி.முகவிற்கு உப்பளம் தொகுதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு கடந்த 15 ஆண்டுகளாக சட்டமன்ற உறுப்பினராக உள்ள அன்பழகன் மீண்டும் அதே தொகுதியில் போட்டியிடுகிறார்.

காந்தி நகர்ப்பகுதியில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரி மோகன் குமாரிடம் தனது வேட்புமனுவை நேற்று அவர் தாக்கல் செய்தார்.

## உத்தரகாண்ட்டில் சதாப்தி ரயில் 35 கி.மீ. பின்னோக்கி ஓடியது ஏன்?

மாட்டின் மீது மோதியதால் தடுப்பு செயற்படாததில் சதாப்தி ரயில் 35 கிலோ மீற்றர் தொலைவு பின்னோக்கி ஓடியதாக தகவல் வெளியாகியுள்ளது.

டெல்லியிலிருந்துஉத்தரகாண்ட்மாநிலத்திலுள்ள தனாக்பூருக்கு பூர்ணகிரி ஜன்சதாப்தி ரயில் சென்று கொண்டிருந்தது. உஸ் மாவட்டத்தில் காதிமா – தனாக்பூர் ரயில் நிலையங்களுக்கிடையே ரயில் சென்று கொண்டிருந்தது. அப்போது, மாட்டின் மீது ரயில் ஏறியுள்ளது. இதனால், ரயிலின் தடுப்பு செயலிழந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. இந்த பகுதி சற்று தாழ்வான பகுதி என்பதால், இந்த சமயத்தில் ரயில் பின்னோக்கி ஓடத் தொடங்கியுள்ளது. செலுத்துனர்களால் ரயிலை நிறுத்த முடியவில்லை. சுமார், 35 கிலோ மீட்டர் தொலைவு ஓடிய பிறகே ரயிலை காதிமா ரயில் நிலையத்தில் நிறுத்தியுள்ளனர். ரயில் பின்னோக்கி ஓடுவதை பார்த்து பயணிகள் பதறிப் போனார்கள்.

தொடர்ந்து, இந்த தண்டவாளத்தில் வந்து கொண்டிருந்த அனைத்து ரயில்களையும் ஆங்காங்கே நிறுத்தினர். பின்னர், காதிமா ரயில் நிலையம் அருகே தண்டவாளத்தில் மண் மற்றும் சல்லிகற்களை கொட்டி ரயிலை அதிகாரிகள் நிறுத்த நடவடிக்கை எடுத்தனர். இந்த சம்பவத்தில் ரயிலில் இருந்த யாருக்கும் காயம் ஏற்படவில்லை. ரயில் நிறுத்தப்பட்டதும் இறக்கப்பட்ட பயணிகள் பஸ்களில் ஏற்றி தனாக்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ரயில் செலுத்துனர்கள் கார்டு ஆகியோர் இடை நிறுத்தம் செய்யப்பட்டனர். கடந்த பெப்ரவரி மாதத் தில்தான் டெல்லிக்கும் தனாக்பூரை இணைக்கும் வகையில் பூர்ணகிரி சதாப்ரி ரயில் சேவை தொடங்கப்பட்டது. மத்திய ரயில்வே அமைச்சர் பியூஸ் கோயல் ரயில் சேவையை தொடங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.












# அரசின் ஜனநாயக விரோதச் செயல்களுக்கு சஜித் பிரேமதாஸவும் பொறுப்புகூறவேண்டும்!

## சந்தித் சமரசிங்க தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 18

அரசாங்கம் ஜனநாயக விரோதமான தீர்மானங்களுக்கு செல்வதற்கு அரசமைப்பின் 20 ஆவது திருத்தமே காரணமாகும். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவும் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்தித் சமரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதென்றும் இயற்கை வனாந்திரங்களைப் பாதுகாப்பதென்றும் தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம், மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு மாறாகவே செயற்பட்டு வருகின்றது. மக்களுக்கு சுதந்திரமாக அவர்களது கருத்துக்களைத் தெரிவிக்க முடியாத நிலையே இருந்து வருகின்றது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்.

மேலும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக்கொண்ட பின்னரே அரசாங்கம் தான் நினைக்கும் எதனை வேண்டுமானாலும் செய்வோம் என்ற நிலைப்பாட்டிலே இருக்கின்றது. 20 ஆவது திருத்தத்தை அரசாங்கம் அனுமதித்துக்கொண்டமைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் பொறுப்புக் கூறவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடனேயே 20 நிறைவேற்றப்பட்டது. அவர்களது ஆதரவு இல்லாவிட்டால் 20 நிறைவேறி இருக்காது.

அத்துடன் 20 ஆவது திருத்தத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர் ஆதரவளிக்க முற்பட்டபோது அதனைத் தடுத்து நிறுத்த சஜித் பிரேமதாஸ முறையான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அதேபோன்று அரசாங்கம் மேற்கொள்ளும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தவோ அதற்கு எதிராகச் செயற்படுவதற்கோ எதிர்க்கட்சிக்கு முடியாமல் இருக்கின்றது. நாடாளுமன்றத்தில் அவர்களும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை வெறுமனே பார்த்துக்கொண்டே இருக்கின்றனர்.

மேலும் நாட்டின் தேசிய வனங்களில் பாரியளவில் காடழிப்பு இடம்பெற்று வருகின்றது. காடழிப்புக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் அரசாங்க அதிகாரிகளால் அச்சுறுத்தப்படுகின்றனர். சிங்கராஜ வனத்தில் இடம்பெறும் காடழிப்பு தொடர்பாக தனியார் தொலைக் காட்சியில் தனது எதிர்ப்பை தெரிவித்த பாக்கியா அபேரத்ன என்ற இளம் யுவதி பாரிய அச்சுறுத்தலுக்கு ஆளாகி இருக்கின்றார். அந்த யுவதியின் அறிவிப்பு தொடர்பாக அரசாங்கம் மிகவும் மோசமான முறையில் யுவதியை விசாரித்து வருகின்றது.

எனவே, அரசாங்கம் இவ்வாறு ஜனநாயக விரோதமான நடவடிக்கைகளைத் தைரியமாக மேற்கொள்வதற்கு 20 ஆவது திருத்தமே காரணமாகும். ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு சென்றவர்களின் ஆதரவுடனே அரசாங்கம் அதனை நிறைவேற்றிக்கொண்டது. அதனால் அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயல்களுக்கு சஜித் பிரேமதாஸவும் பொறுப்புக் கூறவேண்டும். - என்றார்.

# அஸாத்ஸாலியிடம் மீட்கப்பட்டுள்ள துப்பாக்கி குறித்து விசாரணை!

## பொலிஸ் பேச்சாளர்



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முன்னாள் மேல்மாகாண ஆளுநர் அஸாத்ஸாலியின் காரிலிருந்து மீட்கப்பட்ட துப்பாக்கி தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

குற்றப்புலனாய்வு பிரிவினரால் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கொள்ளுப்பிட்டியில் வைத்து முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஸாத்ஸாலி கைது செய்யப்பட்டமையுடன், அவர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இந்நிலையில், கைது செய்யப்படும்போது அஷாத்ஸாலி பயணித்த காரை சோதனைக் குட்படுத்திய குற்றப்புலனாய்வு பிரிவினர் காரிலிருந்து, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றையும், அதன் தோட்டாக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

அதற்கமைய துப்பாக்கி தொடர்பிலும் குற்றப்புலனாய்வு பிரிவினால் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் குறித்த துப்பாக்கி கிடைக்கப் பெற்ற விதம் மற்றும் அதனால் ஏதேனும் குற்றச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக குற்றப்புலனாய்வு பிரிவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# டிஜிற்றல் மயமாக்கலில் நுழைகிறது இலங்கை அஞ்சல் திணைக்களம்!

இலங்கை அஞ்சல் திணைக்களம் டிஜிற்றல் மயமாக்கப்பட்ட தபால் முத்திரைகளை அதிகார பூர்வமாக அறிமுகப்படுத்தியதன் மூலம் டிஜிற்றல் மயமாக்கலில் நுழைந்துள்ளது.

அமைச்சர் கெஹலியா ரம்புக்வெலவின் ஆதரவின் பேரில் வெகுஜன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சகத்தில் இந்த முத்திரைகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி எஸ்.ஆர். குறியீட்டைக் கொண்ட 25 ரூபா பெறுமதியான டிஜிற்றல் முத்திரைகள் வெளியிடப்பட்டன. எஸ்.ஆர். குறியீட்டை ஸ்கேன் செய்து, முத்திரை பணியகத்தின் இலங்கை அஞ்சல் வலைத்தளத்தை அணுகுவதன் மூலம் முத்திரை தொடர்பான அல்லது தொடர்புடைய கூடுதல் தகவல்களைப் பெறலாம். இந் நிகழ்வின்போது சிறப்பு பாதுகாப்பு அடையாளத்துடன் 500 ரூபா பெறுமதியான புதிய தபால் முத்திரையும் வெளியிடப்பட்டது.

1857 ஏப்ரல் முதலாம் திகதி நாட்டின் வரலாற்றில் முதல் முத்திரை வெளியிடப்பட்டது, இன்று வரை இலங்கை தபால் துறை பல்வேறு சந்தர்ப்பங்களுடன் ஏராளமான நினைவு முத்திரைகளை வெளியிட்டுள்ளது.

# தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் திருத்தங்கள் பல விரைவில் வரும்!

கொழும்பு, மார்ச் 18

வெளிநாடுகளில் இருந்து வரும் இலங்கையர்கள் தொடர்பாக பின்பற்றப்படும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் பல திருத்தங்கள் விரைவில் மேற்கொள்ளப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொவிட் பரவலை தடுப்பதற்கான விசேட செயலணிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

வெளிநாடுகளிலிருந்து வருகை தருவோருக்கான தனிமைப்படுத்தல் காலத்தை 7 நாள்களாக குறைப்பது உட்பட பல திருத்தங்கள் இதன் கீழ் செய்யப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அது மாத்திரமன்றி 70 லட்சம் ரஷ்ய கொவிட் தடுப்பூசிகளை முன்பதிவு செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே அடுத்த இரண்டு வாரங்களுக்குள் வரவிருக்கும் பண்டிகை காலத்திற்கு தேவையான சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதன்போது தெரிவித்தார்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# பொத்துவில் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு யோகேஸ்வரன் சரீரப் பிணையில் விடுவிப்பு

அம்பாறை,மார்ச் 18

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தில் கலந்து கொண்டமை தொடர்பில் பொத்துவில் மற்றும் திருக்கோவில் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் இன்று புதன்கிழமை பொத்துவில் நீதவான் நீதிமன்றில் ஆஜராகி சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் -

கடந்த 2021.02.03ஆம் திகதி தொடக்கம் 2021.02.07ஆம் திகதி வரை பொத்து வில் தொடக்கம் பொலிகண்டி வரையில் நடாத்தப்பட்ட சாத்வீக பேரணியில் கலந்து கொண்டது சார்பாக திருக்கோவில் பொலிஸாராலும், பொத்துவில் பொலிஸாராலும் இரண்டு வழக்குகள் 2021. 03.17ஆம் திகதி பொத்துவில் நீதவான் நீதிமன்றில் எனக்கு எதிராக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதற்கான அழைப்பானை பொத்துவில் நீதிமன்றத்தால் வாழைச்சேனை பொலிஸ் நிலையம் ஊடாக 2021.03.16 ஆம்திகதி அன்று மதியம் வழங்கப்பட்டது. இதனால் நேற்று புதன்கிழமை நீதிமன்றில் நான் ஆஜரான நிலையில் எனது சார்பாக சட்டத்தரணி எஸ்.ஜெகநாதன் தலைமையிலான ஐந்து சட்டத்தரணிகள் வழக்கை பொறுப்பேற்று நடாத்தினார்.

பொலிஸாரின் வாதம் பலமாக அமைந்ததால் இன்று திருக்கோவில் பொலிஸாரால் நீதிமன்றில் கொண்டு வரப்பட்ட வழங்கிலிருந்து நான் நீக்கப்பட்டாலும் பொத்துவில் பொலிஸார் சார்பான வழக்கில் ஒரு லட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள் ளேன். அத்தோடு எனது அடுத்த வழக்கு எதிர்வரும் 2021.06.02ஆம் அன்று நீதிமன்றத்திற்கு வருகின்றது.

ஆனாலும் கடந்த 2021.03.12 அன்று திருக்கோவில் பொலிஸார் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான சாத்வீக பேரணியில் எனது வாகனத்தை நான் பயன்படுத்தியதாக குறிப்பிட்ட விசாரணைக்கான கடிதம் 2021. 03.15ஆம் திகதி கிடைத்ததால் 2021. 03.17ஆம் திகதி நேற்று புதன்கிழமை திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் விசாரணை மேற்கொண்டு வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை செங்கலடி செல்லம் தியேட்டர் உரிமையாளர் க.மோகன்



நேற்று அழைக்கப்பட்டிருந்தும் இரு பிரதேச பொலிஸாரும் அவரது வழக்கில் இருந்து அவரை விடுவிக்கக் கோரியமையின் நிமித்தம் அவர் இவ்விரு வழக்குகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## டிப்பர், மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் படுகாயம்

அம்பாறை,மார்ச் 18

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில்பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட தாண்டியடி நேருபுரம் பொத்துவில் பிரதான வீதியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவமானது நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. பொத்துவில் பிரதேசத்திலிருந்து அக்கரைப்பற்று நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டே விபத்து ஏற்பட்டமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தேற்றாத்தீவு உப்பு வெட்டிக்குளம் புனரமைப்பு செவ்வாய்க்கிழமை மாலை ஆரம்பிக்கப்பட்டது

மட்டக்களப்பு ,மார்ச் 18

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திற்குட்பட்ட தேற்றாத்தீவு உப்பு வெட்டிக்குளம் புனரமைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன், பிரதேச அபிவிருத்திக்குழுவின் உப தலைவர் பரமசிவம் சந்திரகுமார், ஆகியோர் இதன்போது கலந்து கொண்டு அபிவிருத்தி வேலைத்திட்டத்தை ஆரம்பித்து



வைத்தனர்.

மேலும் இந்நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரெத்தினம், மற்றும் நீர்ப்பாசன பொறியியலாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.









# சர்வதேச நீதிகோரி திருமலையில் இருவர் சாகும்வரை உண்ணாவிரதம்



திருகோணமலை,மார்ச் 18

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கைகளை சர்வதேசம் கவனத்தில் கொள்ள வேண்டும் என வலியுறுத்தி, கடத்தப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் திருகோணமலை மாவட்டத் தலைவி திருமதி. நா. ஆஷா மற்றும் திருமதி இரா. கோசலாதேவி இருவரும் நேற்று புதன் கிழமை 3ஆவது நாளாக திருகோணமலை சிவன் ஆலய முன்றலில் சாகும் வரை உண்ணாப் விரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன்போது திருகோணமலை மாவட்டத் தலைவி திருமதி நா.ஆஷா கருத்து தெரிவிக்கையில் – இலங்கை அரசாங்கத்தினூடாக எவ்வித தீர்வும் கிடைக்கப் பெறாமையினாலேயே எமது போராட்டங்களை நாங்கள் சர்வதேசத்தை நோக்கி நகர்த்தியிருக்கின்றோம், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி பெண்கள் எத்தனையோ பேர் கண்ணீருடன் வீதியில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள், அவர்களின் கோரிக்கைகளை சர்வதேசம் கவனமெடுத்து செயற்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுத்தாளர் சங்கம் உருவாக்கம்



மட்டக்களப்பு,மார்ச் 18

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான எழுத்தாளர் சங்கம் உருவாக்குவது தொடர்பான கூட்டம் உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரனினதும், மாவட்ட கலாசார திணைக்களத்தினதும் ஏற்பாட்டில் மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திரு. கே.கருணாகரன் தலைமையில் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் திட்டத்திற்கமைய இலங்கையின்சகலமாவட்டங்களிலும் எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்படவுள்ளது.

அந்தவகையில் இராஜாங்க அமைச்சின் சுற்று நிரூபத்திற்கு அமைய மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருந்து தலா 3 பேரை கொண்டதாக மாவட்ட எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்படவேண்டும். அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருந்து தலா 3 பேர் வீதம் மொத்தமாக 42 நபர்களை ஒவ்வொரு பிரதேச செயலாளர்களினாலும் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

## காணிகளற்றவர்களுக்கு அரச காணிகளை முதலீட்டு வாய்ப்பிற்காக வழங்கும் திட்டம்

ஒரு லட்சம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து உருவாக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு அமைவாக காணிகளற்றவர்களுக்கு அரச காணிகளை முதலீட்டு வாய்ப்பிற்காக வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காணி முகாமைத்துவ அலுவல்கள் அரச தொழில் முயற்சிக் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் காணி உபயோக கொள்கை திட்டமிடல் திணைக்களத்தினூடாக முன்னெடுக்கப்படும் இத்திட்டத்திற்கு அமைவாக விண்ணப்பித்துள்ளவர்களுக்கான நேர்முகத்தேர்வு இன்று ஆரம்பிக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் வழிகாட்டலில் உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர் தலைமையில் இடம்பெற்ற நேர்முகத்தேர்விற்கு விண்ணப்பித்துள்ள 1,427 பேரில் முதற்கட்டமாக 320 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

அழைக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் இந்நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியதுடன் அவர்களின் தேவை தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது.

காணி உறுதி பெற்றுக்கொள்ளல், காணி அளவையிடப்பட்டு அளவைப்படம் தயாரித்தல், காணியின் பிணக்குகளை தீர்த்தல், காணி அடையாளம் வைத்து கடன் பெறுதல், தயாரிப்புக்களை விற்பனை செய்வதற்கு உதவி பெறுதல், தயாரிப்புக்களை மேம்படுத்துவதற்கு உதவி செய்தல், தயாரிப்புக்களுக்கான இயந்திரங்களை பெறுவதற்கு உதவி பெறுதல் மற்றும் ஏனைய காணி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் போன்ற விடயங்களும் இந்நேர்முகப்பரீட்சையின்போது ஆராயப்பட்டது.











# இருபதுக்கு 20 தொடரை வெற்றியுடன் ஆரம்பித்தது ஆப்கான்!

ஆப்கானிஸ்தான் – சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான முதலாவது இருபதுக்கு இருபது போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 48 ஓட்டங்களால் இலகுவான வெற்றியைப் பெற்றிருக்கிறது.

நேற்றையதினம் அபுதாபியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடுமாறு ஆப்கான் அணியை அழைத்தது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ரஹ்மத்துல்லா 87 ஓட்டங்களையும் அணித்தலைவர் அஸ்கார் 55 ஓட்டங்களையும் பெற ஆப்கான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது.

சிம்பாப்வேயின் ரிச்சர்ட் மற்றும் முஸரபானி இருவரும் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணியால் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. ரஷிட் கான் 3 விக்கெட்டுக்களையும் ஃபரீட் அஹமட், கரீம் ஜனட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்ற ஆப்கான் அணி 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக ரஹ்மத்துல்லா தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரின் இரண்டாவது போட்டி நாளை நடைபெறவுள்ளது.

Anna EXPRESS Courier Services

அண்ணா
விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

சயன்ஸ் அக்கடமி
நல்லூர் - முருகன் ஆலயம் முன்பாக நாவலர் வீதி, அரியாலை.
தொ.பே : 077 538 8471, 077 312 6807, 021 222 9016
தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற்தர நிறுவனம்
நிகரற்ற சிறப்பான நிர்வாக கட்டமைப்பின் கீழ் யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலுடன் 40 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் கல்வியிலும், ஒழுக்கத்திலும் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம்
கல்வியாண்டு 2021 இல் சிறப்பாக ஆரம்பமாகியுள்ளது.
வெற்றித்தேர்வு ஆரம்பக்கல்விப் பிரிவு
தரம் 1 முதல் தரம் 5 வரை
வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு அலகுப் பரீட்சைகள், மீட்டல் வகுப்புகளுடன் விசேட புலமைப்பரிசில் வகுப்புகள்
தரம் 6 முதல் தரம் 11 வரை
தமிழ்மொழி மூல வகுப்புக்கள்
English Medium Classes
இவற்றுடன் ICT, சிங்களம், English Literature ஆகிய பாடங்களும்
இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று உங்கள் பிள்ளைகளும் சாதனையாளர்களாக எம்முடன் இணைந்திருங்கள்
"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"

CCTV - Professionals at work
தொழில் வல்லுநர்கள் அனுபவம் வாய்ந்தவர்களின் வேலை


| 2MP Pac | 2MP Color Pac |
|---|---|
| 2 கமரா தொகுப்பு ~ 45,500 | 2 கமரா தொகுப்பு ~ 51,000 |
| 3 கமரா தொகுப்பு ~ 54,450 | 3 கமரா தொகுப்பு ~ 63,000 |
| 4 கமரா தொகுப்பு ~ 62,500 | 4 கமரா தொகுப்பு ~ 77,000 |
| 5 கமரா தொகுப்பு ~ 81,950 | 5 கமரா தொகுப்பு ~ 100,000 |
| 6 கமரா தொகுப்பு ~ 90,500 | 6 கமரா தொகுப்பு ~ 110,000 |
| 7 கமரா தொகுப்பு ~ 100,650 | 7 கமரா தொகுப்பு ~ 123,000 |
| 8 கமரா தொகுப்பு ~ 1,09,500 | 8 கமரா தொகுப்பு ~ 1,35,000 |

இத் தொகையில் இங்கு குறிப்பிட்டுள்ள கண்காணிப்பு கருவி தொகுப்பை நிறுவுவதற்கு தேவையான பொருள் தொழிலாளர் கட்டணங்கள் மற்றும் போக்குவரத்து செலவுகள் ஆகியவை அனைத்தும் அடங்கும்!
facebook.com/sunsakthytrader
அழையுங்கள் அலைபேசியில்
021 221 7994 / 077 552 7099
SST சன்சக்தி ரேடர்ஸ்

# சம்பியனானது காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி



(எப்.முபாரக்)

கிழக்கு மாகாண ஹொக்கி சுற்றுப்போட்டியொன்று கந்தளாய் லீவாரத்தின விளையாட்டு மைதானத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. இதில் பத்திற்கும் மேற்பட்ட அணிகள் பங்கு பற்றின.

இறுதிப்போட்டியில் காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணியும் திருகோணமலை மாவட்ட ஹொக்கி அணியும் மோதின. இதில் காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி திருக்கோணமலை மாவட்ட ஹொக்கி அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது தடவையாகவும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது.

வெற்றி பெற்ற காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணிக்கு கிழக்கு மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் வெற்றிக்கிண்ணம் வழங்கிபதக்கங்களும்அணிவித்துகௌரவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர்களும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# துடுப்பாட்ட தரவரிசையில் விராட் கோலி சாதனை

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது போட்டி அஹமதாபாத்தில் நடைபெற்றுவருகிறது. இந்தத் தொடரில் 2 : 1 என்று இந்திய அணி பின்னடைவைச் சந்தித்திருந்தாலும் அணித்தலைவர் விராட் கோலி தரவரிசையில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்.



இந்தத் தொடரின் இரண்டாவது, மூன்றாவது போட்டிகளில் அரைச்சதங்களை அடித்த விராட் கோலி இருபதுக்கு இருபது துடுப்பாட்டத் தரவரிசையில் ஓரிடம் முன்னேறி ஐந்தாவது இடத்தைப் பிடித்திருக்கிறார்.

ஏலவே ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் முதலிடத்திலும் டெஸ்ட் போட்டிகளில் ஐந்தாவது இடத்திலும் துடுப்பாட்ட வீரர்களுக்கான வரிசையிலிருக்கும் கோலி, இருபதுக்கு இருபது போட்டிகளிலும் முன்னேற்றம் கண்டு அனைத்துவித சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் முதல் ஐந்து இடங்களுக்குள் இருக்கும் ஒரே வீரர் என்ற பெருமையையும் பெற்றிருக்கிறார்.


# தொடரின் நிலையை தீர்மானிக்கும் போட்டி இன்று



இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவது இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது. இங்கிலாந்து அணி 2 : 1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளதால் இன்றைய போட்டியிலும் வெற்றிபெறுமாக விருந்தால் தொடரைக் கைப்பற்றிக்கொள்ளும்.

போட்டிகள் நடைபெற்றுவரும் அஹமதாபாத் மைதானத்தில் இரவு வேளையில் பனிப்பொழிவு இருப்பதால் இரண்டாவதாகப் பந்துவீசும் அணிகள் கடும் சவாலை எதிர்கொண்டுவருகின்றன. எனவே, நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்று இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடுவது அணிகளின் வெற்றிவாய்ப்பை அதிகரிப்பதை நடைபெற்று முடிந்த மூன்று போட்டிகளும் உறுதிப்படுத்தியுள்ளன. இன்றைய போட்டியில் வெற்றிபெற்று தொடரை வெல்வதற்கான சாத்தியத்தைத் தக்கவைக்க இந்திய அணித்தலைவர் கோலி நாணயச் சுழற்சியில் வெற்றிபெறவேண்டிய அழுத்தத்தையும் எதிர்கொண்டுள்ளார்.

# டுபாய் ஓபன் டென்னிஸ் ஸ்பெயினின் அகட் தோல்வி



டுபாய் ஓபன் டென்னிஸ் தொடரின் நேற்றைய போட்டியொன்றில் ஸ்பெயினின் ரொபர்ட்டோ படிஸ்டா அகட் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியுள்ளார்.

தரவரிசையில் நான்காமிடத்திலிருந்த அகட்டும் 16ஆவது இடத்திலிருக்கும் இத்தாலியின் ஜனிக் சின்னரும் இந்தப் போட்டியில் மோதியிருந்தனர். முதல் செட்டிலேயே 4 : 6 என்ற கணக்கில் முன்னிலை பெற்று அகட்டுக்கு சின்னர் அதிர்ச்சியளித்தாலும் இரண்டாவது செட்டில் 6 : 3 என்ற கணக்கில் அகட் எழுச்சிபெற்றார். ஆயினும் இறுதி செட்டில் அதீத வேகத்தோடு விளையாடிய சின்னர் 5 : 7 என்ற கணக்கில் செட்டைக் கைப்பற்றி போட்டியிலும் வென்றார்.












# இரணைதீவு மக்களைச் சந்தித்தார் சிறிதரன்





இரணைதீவுமக்களின்பல்வேறுபிரச்சினைகளுக்கு எமது புலம்பெயர் தமிழர்கள் உதவிவருகின்றார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண, கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துளார்.

கிளிநொச்சி பூநகரி இரணைதீவு பிரதேசத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மக்களுக்கான உலர் உணவுப் பொருள்களை இன்று (வியாழக்கிழமை) வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிஇரணைதீவுபகுதியில்தங்கியிருக்கின்ற மக்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் கனடா நாட்டில் வசிக்கும் சிறி என அழைக்கப்படும் சின்னத்துரை சண்முகலிங்கம் என்பவரால் வழங்கி வைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் இரணைமாதா நகர் இறங்கு துறையில் வைத்து பங்கு தந்தையிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கனடா மொன்றியல் நாட்டிலே புறுட் கபே என்ற ஸ்தாபனத்தை நடத்தி வருகின்ற அதன் உரிமையாளரான சிறி என அழைக்கப்படும் சின்னத்துரை சண்முகலிங்கம்கிளிநொச்சிமாவட்டத்தில்பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றார் இரணைதீவுப் பகுதியில்உள்ளமக்களுக்குஉரியஉணவுப்பொருள்களை பங்குதந்தை ஊடாக அவர் வழங்கியிருக்கின்றார் அண்மையில் கூட போரால் பாதிக்கப்பட்ட12 முன்னாள் போராளிகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உதவிகளையும் வழங்கி இருக்கின்றார்.

நிலத் தொடர்புகளுடன் இருக்கின்ற மக்களைவிட நிலத் தொடர்புகள் இல்லாத இரணைதீவு மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து அவர்கள் பல்வேறு போராட்டங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள் இந்த மக்கள் இன்று தங்களுடைய சொந்த நிலத்தில் நிம்மதியாக வாழ முடியாமலும் சொந்த கடலில் தொழில் செய்ய முடியாத ஒரு நிலையிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் கல்வியமைச்சர் த.குருகுலராஜா, பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் கஜன், பூநகரி பிரதேச சபை உறுப்பினர் எமிலியாம் பிள்ளை மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள், உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். (-55)

# இசைப்பேரறிஞர் கணபதிப்பிள்ளையின் மறைவு ஈழத்துக் கலை உலகத்துக்குப் பேரிழப்பாகும்!

## கலாநிதி ஆறு.திருமுருகன் இரங்கல்

மூத்த இசைக் கலைஞர் அமரர் சு.கணபதிப்பிள்ளை நேற்று (புதன்கிழமை) சுழிபுரத்தில் காலமானார். அவரது மறைவு ஈழத்துக் கலை உலகத்துக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அவரது மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

– இவ்வாறு தனது இரங்கலுரையில் தெரிவித்துள்ளார் இந்துமாமன்றத்தின் உப தலைவரும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்.

அவரது இரங்கலுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

ஈழத்திருநாட்டில் இசைத்துறை வளர்ச்சிக்குக் கடந்த 60 ஆண்டுகளுக்கும்மேலாகஅர்ப்பணிப்புடன்சேவையாற்றிய பெரும் கலைஞரைத் தமிழ்கூறும் நல்லுலகு இழந்து நிற்கின்றது.

இசைத்துறையில்நடமாடும்களஞ்சியமாகவிளங்கியவர் அமரர் சு.கணபதிப்பிள்ளை. இசைத்துறை தொடர்பாக எந்தச் சந்தேகத்தையும் தீர்த்துவைக்கும் பேரறிஞர் அவர். இசைத்துறையின்கல்விப்பணிப்பாளராகவும்இசைத்துறைப் பரீட்சகராகவும், இசை விமர்சகராகவும் உலாவந்த பெருமகனாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

வட இலங்கை சங்கீத சபையின் வளர்ச்சியிலும் இராமநாதன்நுண்கலைப்பீடத்தின்வளர்ச்சியிலும்இளங்கலைஞர் மன்றத்தின் வளர்ச்சியிலும் அயராது உழைத்த இந்தப் பெருமகானுக்கு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதைத் தவிர எனக்கு வேறுவழி தெரியவில்லை.–என்றுள்ளது.

# தொடரும் ஆபத்து திருகோணமலை நகரில் 41 பேருக்கு கொரோனா

திருகோணமலை நகரின் என்.சி.வீதி, மத்திய வீதி, மூன்றாம் குறுக்குத்தெரு போன்ற பிரதேசங்களில் இம்மாதம் 15ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் முடிவுகள், நேற்று அதிகாலை வெளியிடப்பட்டன.

இதனடிப்படையில், 243 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 41 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக நகர பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

காத்தான்குடியைச் சேர்ந்த 30 பேருக்கும் திருகோணமலையைச் சேர்ந்த 11 பேருக்குமே கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 15ஆம் திகதி மூடப்பட்டிருந்த கடைகள் இன்று திறக்கப்பட்டிருந்த போதும் மக்கள் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

மேலும், வைரஸ் தொற்று உறுதியான தொற்றாளர்கள் அனைவரையும் கொரோனா மத்திய நிலையத்துக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளை திருகோணமலை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் முன்னெடுத்துள்ளது.

# ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய உறவுகளைச் சந்திக்கின்றார் டக்ளஸ்!

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை வெகு விரைவில் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று புதன்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவறு கூறினார்.

உறவுகளை சந்தித்து அவர்களுடைய தேவைப்பாடுகள் மற்றும் அவர்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து தனக்குத் தெரியப்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை கேட்டுக்கொண்டார் எனவும் அவர் கூறினார்.

அதற்கமைய வடக்கு மாகாணத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவினர்களைஎதிர்வரும்சனிக்கிழமை மாவட்ட செயலகத்தில் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாட உள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.




# ஜெய்க்கா திட்டத்தில் 24 லட்சம் ரூபா நிதி மோசடி

மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் ஜெய்க்கா திட்டத்தில் 24 இலட்சம் ரூபா மோசடி தொடர்பாக கைது செயயப்பட்ட திட்டத்தின் கணக்காளரை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி. றிஸ்வான் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட வீதி அபிவிருத்திக்காக 2010 தொடக்கம் 2014 வரையிலான நன்கொடையாக பணம் வழங்கப்பட்டது இத்திட்டத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் நியமிக்கப்பட்ட கணக்காளர் குறித்த காலப்பகுதியில் அப்போது கடமையாற்றிய நிலையில்; 24 லட்சத்து 39 ஆயிரத்து 200 நூற்று 85 சதம் (2,439,200.85) பணத்தை மோசடி செய்துள்ளதாக கடந்த 2019 ம் ஆண்டு இத்திட்டத்தின் ஒப் பந்தகாரரினால் மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்றப்புலனாய்வுபிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து விசேட குற்றப் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் துஷார பிரேமானந்த தலைமையிலான குற்றப் புலனாய்வு பிரிவினர் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் நிதி மோசடி தொடர்பாக கணக்காளரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றின் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்






# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

# கடந்து வந்த பதிவுகள்



காலைக்கதிர் மாலைப்பதிப்பு

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலைக் கண்டித்து அடை மழையிலும் முல்லைத்தீவு மீனவர்கள் போராட்டம்!

முன்னாள் எம்.பி. மஹ்ரூப் கைது!

யாழில் மேலும் 13 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

மருதனார்மடம் கொத்தணி 52 ஆக அதிகரிப்பு

பயிற்சியில் ஈடுபட்ட விமானம் விழுந்தது

வவுனியா இளைஞர்கள் இருவர் படகு விபத்தில் பரிதாப மரணம்!

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

ஆழிப்பேரலையில் உயிரிழந்தவர்களை நினைவேந்தி தீபமேற்றினார் மஹிந்தர்

மதில் விழுந்து சிறுவன் சாவு!

கொரோனாத் தொற்று அதியுச்சம்

கொழும்பில் நேற்று மட்டு 300 பேருக்கு கொரோனா

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

இலங்கைக் கடற்படையினரின் டோறாவினால் மோதப்பட்ட இந்திய ட்ரோலரில் இருந்த 2 மீனவர்களின் சடலங்கள் மீட்பு!

மற்றிருவரின் கதி இன்னும் தெரியவில்லை

மாகாண சபைத் தேர்தலை நடத்த ஆணைக்குழு தயார்

தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவிப்பு

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

அக்கரைப்பற்றில் 91 பேருக்கு தொற்று

இலங்கைப் படைகளுக்கு உதவிகள் செய்த பிரி. நிறுவனம் மீது யுத்தக் குற்ற விசாரணை

ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸ் ஆரம்பித்தது

பெருந்தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றுகின்றது கோட்டாபய அரசு!

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

தமிழர்களைப் படுகொலை செய்தவர்களுக்கு பதவி உயர்வுகளும், பதக்கங்களும், மன்னிப்பும்

மஹர சிறைச்சாலை கலவரம் 4 பிரிவுகளாக விசாரணைகள்

மஹர சிறை அமைதியின்மை சாவடைந்தோர் 9 ஆக

ஒரே நாளில் 6 விபத்துகள்: எழுவர் பரிதாப உயிரிழப்பு

மாகாணசபைத் தேர்தல் நடக்கவே நடக்காது

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

அரசுக்கு அமைச்சர்கள் ஒத்துழைப்பு வழங்காவிடின் பேரழிவுதான் மிச்சம்

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

'மொட்டு' கட்சி மீது மைத்திரி கடும் அதிருப்தி!

கொரோனாவுக்கு முடிவுகட்ட வந்தன 5 லட்சம் தடுப்பூசிகள்

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய மூவரடங்கிய ஆணைக்குழு

இந்தியக் குடியரசுத் தினம்: யாழில் கொண்டாட்டம் ரத்து

நாளை முதல் உதயமாகிறது...

HI CLEAN

MULTI CENTER

நான்கு மீனவர்களின் சடலங்களும் நள்ளிரவு நடுக்கடலில் கையளிப்பு

# இரண்டாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

# கடந்து வந்த பதிவுகள்


காலைக்கதிர் மாலைப்பதிப்பு

வேட்புமனுத் தாக்கல் முடிந்ததும்

இரு வாரங்களுக்கு நாடு முடக்கப்படும்!

மூர்க்கத்தனம் மிக்க நடவடிக்கை கொரோனாவை தடுக்க அவசியம்

இரும்புக் கைகொண்டு கொரோனாவை அடக்கத் தயாராகிறது கோட்டா அரசு

இன்று காலை வேட்புமனுத் தாக்கல்...

தேசியப் பட்டியலில் அம்பிகா!

அவரே தன் வாயால் தகவல்

3 மாணவர்களுக்கும் கொரோனா பாதிப்பு

தேர்தலை ஒத்திவைக்க தயாராகிறது ஆணையம்

கோட்டாபயவுடன் நாளை முக்கிய ஆலோசனை

ஐக்கிய மக்கள் சக்தி

සමගි ජන බලවේගය SAMAGI JANA BALAWEGAYA

மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க

காலத்தின் தேவை கருதி

சமூக சேவையை மேம்படுத்த

கௌரவ சஜித் பிரேமதாச

அ.கிரு

தமிழ் பேசும் மக்களின்

The Distinctive Voice of The Tamil Speaking People

முள்ளிவாய்க்கால் நினைவுத்திடலில் வணக்கம்

மாபெரும் எழுச்சிப் பேரணி வவுனியாவுக்குப் பயணம்!

பெரும்பான்மை மக்களுக்கு எதிரான பேரணியல்ல இது!

வெற்றிநிதிக் வெளியீட்டகம் நடாத்தும்

55 வயதிலும் ஓய்வு பெறலாம்

முற்கூட்டியே வாக்களிக்கும் முறை வரும்!

அரசு இணக்கமாம்

அமைச்சர்களுக்கும் பொதுமக்களுக்கும் கொரோனா சட்டம் வேறுபடுகின்றதா?

கொழும்புத் துறைமுகத்தின் ஓர் அங்குலத்தைக் கூட சர்வதேசத்துக்கு வழங்கவேமாட்டாது ராஜபக்ஷ அரசு

இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கையில்

13 ஆவது திருத்தம் உட்பட அர்த்தம் உள்ள

தமிழர்களின் எதிர்பார்ப்பு நிறைவு செய்யுங்கள்!

விண்ணதிர உரிமைக் கோஷங்களை எழுப்பியவாறு

பொலிகண்டியை வந்தடைந்தது பேரணி; பல்லாயிரக் கணக்கானோர் அணிதிரள்வு

ஆயிரக் கணக்கான வாகனங்களும் பவனி

கோட்டாவுடன் ஜெய்சங்கர் மூடிய அறைக்குள் சந்திப்பு

சிறுபான்மை இன மக்களின் மனங்களைக் காயப்படுத்தாதீ

மஹர சிறைக் கலவரம் கட்டுப்பாட்டுக்குள்: 8 பேர் உயிரிழப்பு; 70 பேர் வரை படுகாயம்

சிங்கள - பௌத்த மக்களைச் சீற்றமடையச் செய்யாதீர்!

கொழும்புத் துறைமுகத்தை சர்வதேசத்த கொடுக்கவே முயற்சிக்கிறது ராஜபக்ஷ

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.03.2021இல் வெளியிடப்பெற்றது.